For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

பிப்ரவரி 2024 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் விலை : ரூ 60 இதழ் 45

Engage, Enrich, Empower Christian Knowledge





WWW.CHRISTIANHISTORICALSOCIETY.IN

# ஆசிரியர் சுவடு


## கர்த்தருடைய அதிசயமான நடத்துதல்

உபாகமம் 32; 7ல் 'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்' என்ற வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லப்பட்டது.




அன்று பூர்வநாட்களை அறிந்து அதனை தங்கள் பிள்ளைகளுக்கு கற்று கொடுப்பது ஒவ்வொரு தகப்பனின் கடமையாக இருந்தது. ஆனால் இன்று அவசர உலகத்தில் பலர் இந்த கட்டளையை மறந்துப் போனவர்களாக இருக்கின்றோம். இன்றைக்கு இந்த உன்னதமான பணியினை, கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நிறைவேற்றி வருகின்றது.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், பல இளைஞர்கள் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.




கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.




இதுவரையிலும் நம்முடைய மாத இதழில் வெளி வராத கட்டுரைகளை எழுதவும், மக்கள் இன்றும் கேள்விப்படாத நிலையில் உள்ள வரலாற்று சம்பவங்களை கொண்டு செல்லும் நோக்கில் ஜெபத்துடனும், தரிசனத்துடனும் எழுத அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனவே வாசகர்கள் இம் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, மாத சந்தாவை புதுப்பித்து கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பாரபரனின் பணியில்

*Manna Selvakumar*


**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**


G Pay


**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,
இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு



**தொடர்புக்கு +91 91767 80001**
**christianhistoricalsociety.in**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com




# கர்த்தாவே யுகயுகமாய்

(பாமாலை 253) (A.M.165)

**பேரா.பொ. குட்டி ஜாஸ்கர்**
போப் கல்லூரி, சாயர்புரம்

ஐரோப்பாவில் முதன்முதலாக பதினாறாம் நூற்றாண்டில் தான் ஆலய ஆராதனைகளிலும், இதர வழிபாடுகளிலும் ஞானப்பாட்டுகள் பாடப்பட்டன. 1542ம் வருடம் மார்ட்டின் லூதர் அவைகளை ஒன்றாக சேர்த்து விண்டன்பர்க் (ஜெர்மனி) என்னும் இடத்தில் வெளியிட்டார். அதற்கு பின் ஜெனிவன் சங்கீதப்பாட்டுகள் என்ற பெயரால் சில பாட்டுகள் வெளியாயின. இவைகளே கிறிஸ்தவச் சபைகளில் பாடப்படும் ஞானப்பாட்டுகளுக்கு ஆரம்பமாகும்.

அக்காலத்தில் பல கவிஞர்கள் பாக்களை எழுதி வந்த போதிலும், டாக்டர் வாட்ஸ், சார்லஸ் வெஸ்லி என்பவர்கள் காலம் வரைக்கும்; இப்பாட்டுகளின் சிறப்பு, பாடல்களால் நாம் பெறும் ஆறுதல், இன்பம் ஆகியவற்றை ஆங்கில மக்கள் அறிந்து கொள்ள பல ஆண்டுகளாயின. ஆங்கில மக்களால் அவை ஆதரிக்கப்படவும் இல்லை. இவ்விருவரில் சார்லஸ் வெஸ்லி எழுதிய ஞானப் பாட்டுகளில் தொகை சுமார் 6500 என்றும், டாக்டர் வாட்ஸ் எழுதிய பாட்டுகள் சுமார் 600 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

டாக்டர் வாட்ஸ் 'ஆங்கில ஞானப்பாட்டுகளின் தந்தை' என்று அழைக்கப்பட்டார். இவர் எழுதிய ஞானப் பாட்டுகள் 1706ம் ஆண்டு புத்தகமாக வெளியிடப்பட்டது. இவர் எழுதிய ஞானப்பாட்டுகளில் 'கர்த்தாவே யுகயுகமாய்' 'பகலோன் கதிர் போலுமே' 'வெள்ளங்கி பூண்டு மாட்சியாய்' 'என் அருள் நாதா இயேசுவே' ஆரம்பிக்கும் பாட்டுகளை நம்முடைய பாமாலை புத்தகத்தில் (பாமாலை 253, 212, 158, 103) காணலாம். இப்பாட்டுகளில் கர்த்தாவே யுகயுகமாய் எம் துணை ஆயினீர் என்று ஆரம்பிக்கும் பாட்டை **'கிறிஸ்தவ சபையின் தேசிய கீதம்'** என்று ஆங்கில மக்கள் சொல்வதுண்டு.

டாக்டர் வாட்ஸ் 1674ம் ஆண்டு ஜீலை மாதம் 17ம் தேதி (17.01.1674) அன்று இங்கிலாந்திலுள்ள சௌத்தாம்டனில் பிறந்தார். அவரது தந்தை ஒரு மறுமலர்ச்சி திருச்சபையின் போதகர். கல்வியறிவு நிறைந்த அவர் வாட்ஸ் பிறந்த நாட்களில், தனது புரட்சிகரமான மறுமலர்ச்சிக் கொள்கைகளுக்காக சிறையிலிருந்தார். அவரது 9 பிள்ளைகளில் மூத்த மகன் தான் வாட்ஸ்.

சிறுவயதிலிருந்தே வாட்ஸ் கவிதை இயற்றுவதில் சிறந்த தாலந்து படைத்தவராக விளங்கினார். வாட்ஸ் தமது 5வது வயதில் லத்தீன்; மொழியையும் 9வது வயதில் கிரேக்க மொழியையும், 11வது வயதில் பிரெஞ்சு மொழியையும், 13வது வயதில் எபிரேய மொழியையும், தம் தந்தையிடம் கற்றுத் தேறினார். இவர் எழுதிய பாடல்கள் புதுமையான கோணத்தில் இருந்ததால், இவர் அக்காலத்தின் புரட்சிக் கவிஞராகக் கருதப்பட்டார்.

வாட்ஸ் 18 வயது நிரம்பின வாலிபனாய் இருக்கும் போது அவருடைய தந்தை சௌத்தாம்டனில் உள்ள ஒரு சிற்றாலயத்தில் டீக்கனாக பணியாற்றி வந்தார். ஆலய ஆராதனைகளில் சரியான இசையமைக்கப்படாத தாவீதின் சங்கீதங்கள் பாடப்பட்டு வந்தன. வாட்ஸிடைய செவிகளுக்கு அவை இனிமையாகத் தோன்றவில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று தம்முடைய தந்தையுடன் அதைக் குறித்து பேசினார். அதற்கு அவர் **"வாலிபனே அப்படியானால் நீ அவைகளை விட மேலானதை சபைகளுக்கு கொடு"** என்று கூறினார். வாட்ஸ் அதை தமக்கு ஒரு சவாலாக எடுத்து, உடனடியாக அன்று சாயங்கால ஆராதனைக்குள் ஞானப்பாட்டை எழுதி அதற்கு இசையமைத்துக் கொடுத்தார். அன்று அது ஆலயத்தில் பாடப்பட்ட பொழுது, சபையின் மக்கள் அதனைப் புகழ்ந்தனர். அது முதல் வெள்ளப்பிரவாகம் போல் அவருடைய பாக்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. அவருடைய மேஜையின் மீது எப்பொழுதும் ஏராளமான புத்தகங்களும் ஒரு வேதப்புத்தகமும், ஒரு புல்லாங்குழலும் இருந்தன. தம்முடைய ஞானப்பாட்டுகளை மக்கள் பாடி, அவைகளின் மூலமாய் மக்கள் கிறிஸ்துவினண்டை இழுக்கப்பட வேண்டுமென்பது அவருடைய பேராவல்.

இப்பாடல் மோசேயின் சங்கீதமாகிய 90ம் சங்கீதத்தை மையமாக வைத்து எழுதப்பட்டது. காலத்தின் அருமையை அழகாகச் சித்தரிக்கும் இசை சங்கீதத்தை வாட்ஸின் இப்பாடல் இன்னும் மதிப்பு மிக்கதாக உயர்த்தியுள்ளது. 9 சரணங்களோடு எழுதப்பட்ட இப்பாடலின் 1,2,3,5,9 ம் சரணங்களே, இப்போது பொதுவாகப் பாடப்படுகின்றன. இப்பாடலை 1719ம் ஆண்டு

வாட்ஸ் "புதிய ஏற்பாட்டு நடையிலுள்ள தாவீதின் சங்கீதங்கள்" என்ற பாடல் புத்தகத்தில் வெளியிட்டார்.

இங்கிலாந்து தேசத்தில் ஆன்ராணியின் (Queen Anne) ஆட்சி முடிவுக்கு வந்து கொண்டிருந்த காலத்தில் இது எழுதப்பட்டது. ஆன் ராணி தன்னுடைய இரக்க சுபாவத்தினால் மக்களின் நன்மதிப்பைப் பெருமளவில் பெற்றிருந்தார். அப்படிப்பட்ட அரசிக்கு பிள்ளை இல்லை. அவளுக்கு பிள்ளை இல்லை என்றதால், ஜெர்மன் நாட்டிலுள்ள Hanover மாகாணத்தின் மன்னர் தான் இங்கிலாந்து நாட்டிற்கு அரசராக வேண்டுமென்ற ஒரு ஏற்பாடு இருந்தது. இந்த ஜெர்மன் நாட்டுக்காரர் எப்படிப்பட்டவரோ? நமது நாட்டின் மொழி தெரியாது. நமது நாட்டின் பழக்க வழக்கங்களும் தெரியாது. நமது நாட்டின் பெருமை குன்றிப் போகாத வண்ணம் அதைக் காத்துக் கொள்ளக்கூடிய திறமையுள்ளவராயிருப்பாரா? என்றெல்லாம் இங்கிலாந்து தேசத்து மக்கள் மனங்குழம்பிய நிலையிலிருந்தனர். நமது நாட்டின் எதிர்காலம் எப்படிப்பட்டதாயிருக்கப் போகிறதோ என்று கவலை கொண்டிருந்தனர். இதுவுமின்றி மத சம்பந்தமாயும், திருச்சபை சம்பந்தமாயும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு பற்பல கட்சிகள் தோன்றி ஒன்றையொன்று எப்படி துன்புறுத்துவது என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வந்தனர். மக்கள் மனதில் பீதி ஏற்பட்டு, நிச்சயமில்லாத ஒரு வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தனர்.

மக்கள் மனதில் உள்ள பயத்தை போக்க வேண்டும் ஆண்டவரின் பாதுகாப்பை பற்றிய நிச்சயத்தை மக்களுக்கு ஊட்ட வேண்டும். காலங்கள் மாறலாம். ஆனால் கர்த்தர் மாறாதவர், அவருடைய கிருபையும் மாறாது என்ற பாடத்தை மக்களுக்கு புகட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஐசக் வாட்ஸ் இப்பாட்டை எழுதினார். 1748ம் வருடம் நவம்பர் மாதம் 25ம் தேதி தமது 74வது வயதில் இவர் மரித்தார்.

இங்கிலாந்து தேசத்தின் எல்லா பண்டிகை நாட்களிலும் இப்பாடல் பாடப்படுகிறது. விக்டோரியா மகாராணியின் ஞாபகார்த்த கல் திறந்து வைத்த போதும், 7வது எட்வர்ட் அரசனுடைய அடக்க ஆராதனையிலும், இளவரசன் எட்வர்ட் வேல்ஸ் இளவரசனாக நியமிக்கப்பட்டபோது நடந்த ஆராதனையிலும் இப்பாடல் பாடப்பட்டது. வாட்ஸ் மரித்தபோது, அவரது தாய்நாடு வெஸ்ட் மினிஸ்டர் அபேயில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைத்துக் கௌரவித்தது.

இப்பாடலுக்கு வில்லியம் கிராப்ட் இசையமைத்து 'தூய ஆன்' என்று பெயர் சூட்டினார். இப்பாடலினால் அந்த ராகம் பிரபல்யமாகி பின்னர் இசை மேதைகளான ஜார்ஜ் F. ஹாண்டல், J.S. பாக் ஆகியோர் அந்த ராகத்தை விரும்பி தங்கள் பாடல்களில் உபயோகித்தனர்.

வருஷப்பிறப்பு தினத்தில் இந்த பாட்டைப் பாடுவது மிகவும் பொருத்தமானது என்று எண்ணுகிறவர்கள் உண்டு. கடந்த காலத்தில் கடவுள் நம்மை காத்து வந்ததை நினைத்து, இதுவரைக்கும் நம்மை காத்து நடத்தி வந்த ஆண்டவருடைய கிருபை இன்னும் நம்மை தாங்கி நடத்தும் என்று திடங்கொண்டு புது வருஷத்திற்குள் பிரவேசிக்கிறோம் என்பதைக் காட்டும் ஒரு அருமையான பாட்டு.

தேவனுக்கே மகிமையுண்டாவதாக.


கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
| --- | --- |
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



ஆசிரியர்
கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



# உன் சபை

கிறிஸ்தவர்கள் முற்காலத்தில் கட்டின கோவில்களில் சாதாரணமாய் முன்னறை (Front Nave), கப்பல் (Nave), பீட பாசும் (Apsis) என்று மூன்று பாகங்களிருந்தன.

**முன்னறை (Front Nave)**

ஞானஸ்நான ஆயத்தக்காரரும், சபை தண்டனைக்குட்பட்டவர்களும் அசுத்த ஆவியால் பிடிபட்டவர்களும் இருக்க வேண்டிய இடம் முன்னறையே. 6ம் நூற்றாண்டிலிருந்து ஞானஸ்நான தொட்டி இவ்வறையில் வைக்கப்பட்டது. ஐரோப்பா கண்டத்தில் யாவரும் கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்தபின் ஞானஸ்நான ஆயத்தக்காரரின் தொகையும் முன்னறையின் அளவும் குறைந்தது. இப்போது சிறிதாய்ப் போன இந்த அறை ஆயுத அறை என்றும் அழைக்கப்படும். ஏனென்றால் கள்ளர், துஷ்ட மிருகங்கள் இவைகளுக்கு அஞ்சிப் பாதுகாப்புக்காக ஜனங்கள் கோவிலுக்குக் கொண்டு வருகிற ஆயுதங்களை அங்கே வைப்பார்கள், இராஜாக்களுங்கூட அங்கே தங்கள் ஆயுதங்களையும் கிரீடங்களையும் வைத்து விடுவதால் பரம இராஜாவின் வீட்டில் ஆண்டவருக்கு முன் உலக மேன்மை ஒன்றுமில்லை என்று அறிக்கை செய்வார் போல் கோவிலுக்குள் பிரவேசிப்பார்கள்.

**கப்பல் (Nave).**

இது கோவிலின் முக்கிய பாகம். இங்கே ஞானஸ்நானம் பெற்ற சபையார் எல்லாரும் உட்காருவார்கள், இங்கே வேதவசனத்தை வாசித்து விஸ்தரிக்கிறதற்கு ஏற்பட்ட பிரசங்கப் பீடமிருந்தது, பிற்பாடு பிரசங்கத் தொட்டியும் அங்கே வைக்கப்பட்டது. நோவா தன் குடும்பத்தோடே ஒரு கப்பல் அல்லது பேழையால் ஜலப்பிரளயத்தினின்று இரட்சிக்கப்பட்டது போல் விசுவாசிகள் புதிய ஏற்பாட்டுப் பேழையாகிய திருச்சபையிலிருந்து இரட்சிப்படைகிறதினால் கோவிலின் முக்கிய பாகமாகிய இதற்குக் கப்பல் என்ற பெயர் உண்டாயிற்று, ஆகையால் கோவில்கள் ஒரு கப்பலைப்போல் தோன்றும்படிக்கு நீளமாகக் கட்டப்பட்டன. 3-ம் 4 ம் நூற்றாண்டுகளில் கப்பலுக்கு இருபக்கத்திலும் ஒரு சிறு கப்பலைக்கட்ட ஆரம்பித்தார்கள், அதற்குப் பிறகு ஐந்து கப்பல்களுள்ள கோவில்களும் கட்டப்பட்டன. இதற்கிசையப் பல இடங்களில் ஒரு சின்ன மரக் கப்பலைச் செய்து கோவிலில் தொங்கவைப்பதும் உண்டு. அதின்மேல் பரிசுத்தாவியானவரைக் குறிக்கும் ஒரு புறாவும் தொங்கும், துன்பங்களின் அலைகளினால் திருச்சபையின் கப்பல் எப்போதும் சேதப்படக்கூடியதாயிருந்தும் அது சுகபத்திரமாயிருக்கும் என்பதை இது குறிக்கும்:

**பீடபாகம் (Apsis)**

மற்றப் பாகங்களுக்கு உயர்ந்ததும் கிராதியினால் பிரிக்கப்பட்டதுமாயிருந்தது. அங்கே குருக்கள் மாத்திரம் உட்காரலாம். 692ம் வருஷத்தில் சக்கரவர்த்திக்கும் அங்கே உட்கார உத்தரவு கிடைத்தது. சீர்திருத்தலுக்குப் பிந்தி குருப்பட்டம் பெறாத மற்றவர்களுக்கும் அங்கே இடம் கொடுக்கப்பட்டது. பாடகர் அங்கே நின்று பாடுவார்கள். அங்கே குரு ஜெபம்பண்ணுவார். கிறிஸ்தவர்கள் கிழக்கே நோக்கி ஜெபம்பண்ணினதினால் 'சூரியன் உதிக்கிறதும் நீதியின் சூரியனாகிய கிறிஸ்து உதித்ததுமான' கீழ்த்திசையை நோக்கி குருவும் சபையாரும் ஆராதனை செய்வார்கள். ஆகையால் கிறிஸ்தவர்கள் கோவில்களை மேற்குக்கிழக்காகக்கட்டிப் பீடத்தைக் கிழக்கே வைத்துக் கட்டுவது

பெரும்பாலும் வழக்கமாயிற்று.

**பீடம்**

ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்களுக்கும் யூதர்களுக்கும் அஞ்ஞானிகளுக்குமிருக்கிற வித்தியாசத்தைக் காட்டுவதற்காகத் தங்கள் கோவில்களில் சாதாரணமாய்ப் பீடம் வைத்ததில்லை. இராப்போசன ஆராதனை, காணிக்கைச் சேர்ப்பு முதலிய சமயங்களில் மாத்திரம் ஒரு சாதாரண மேசையைக் கோவிலில்' வைத்தார்கள். கன்ஸ்டன்டீன் சக்கரவர்த்தியின் காலத்துக்குப் பிறகு கற்பீடங்களை ஏற்படுத்தவும் அவைகளை அலங்கரிக்கவும் ஆரம்பித்தார்கள். கன்ஸ்டன்டீன் எருசலேமில் கட்டின புதுக் கோவிலின் பீடத்தை நேர்த்தியாக அலங்கரித்தான். அதே காலத்தில் பீடத்தின் மேல் படங்களை வைக்கவும் ஆரம்பித்தார்கள், பரிசுத்தவான்களை வணங்கும் வணக்கம் அதிகரிக்கவும் ஒவ்வொரு கோவிலிலும் பல பீடங்கள் ஏற்பட்டன. ரோமாபுரியிலுள்ள பேதுரு ஆலயத்தில் 25 பீடங்களிருந்தன. சுவீடன் தேசத்தைச் சேர்ந்த லொண்ட் பட்டணத்திலுள்ள பிரதான ஆலயத்தில் 48 பீடங்களிருந்தன.

சீர்திருத்தலின் காலத்தில் ஒரு கோவிலுக்கு ஒரு பீடம்தான் இருப்பது போதும் என்கிற எண்ணம் ஸ்திரப்பட்டது. பீடம் பரிசுத்தத்திற்கும் பரிசுத்தமான இடமாயிருப்பதால் சபைபார் அதை மிகவும் நேசிக்கவும் மரியாதையாய் நடத்தவும் வேண்டும். முக்கிய திருச்செய்கைகளாகிய இராப்போசன ஆராதனை, கலியாணம் முதலியவை. பீட சம்பந்தமாய் நடந்திருக்கும், சிலுவையின் அடையாளம். அங்கேயிருப்பதும் நலம். எந்த குருவும் விசேஷித்த ஆயத்தமின்றிப் பீடத்திற்கு முன் நிற்கத்தகாது, பீடத்தின் மேல் அழகான புஷ்பங்களை வைக்கலாம். ஐரோப்பாவில் விசேஷமாய் குருவின் மனைவியும் சபைப் பெண்களும் பீடத்தை ஜோடிப்பார்கள்.

**பிரசங்கத்தொட்டி,**

இப்போதிருக்கிறதுபோல் முற்காலத்திலிருந்ததில்லை. அத்தியஷருக்குப் பீடத்திற்குச் சமீபமாய் ஒரு உயர்ந்த ஆசனம் இருந்தது. அவரைச் சுற்றி மற்ற குருமார் உட்கார்ந்தார்கள். இந்த உயர்ந்த ஆசனத்திற்கும் கிராதிக்கும் சமீபமாய் நின்று பிரசங்கம்பண்ணினார்கள். சபையார் உட்கார்ந்திருக்கிற கப்பல் பாகத்தில் இருக்கிற பிரசங்க பீடம் என்கிற இடத்திலிருந்து வேதம் வாசிக்கப்பட்டதே ஒழிய பிரசங்கம் துவக்கத்தில் அங்கிருந்து செய்யப்பட்டதில்லை. கிறிசொஸ்தம் (407), அகுஸ்தீன் (430) என்பவர்கள் அங்கிருந்து முதல் முதல் பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்.

லுத்தரின் சீடரும் சுவீடன் தேசத்துச் சீர்திருத்தியுமான உலாவுஸ்பேத்ரி என்பவர் ஸ்டாக்ஹோம், பட்டணத்தில் குருவானபோது அவருக்கு அனுசரணையாக இருந்த குஸ்தாவுஸ் இராஜா அவருக்காக ஒரு பிரசங்கத்தொட்டியைக் கட்டினார். அங்கிருந்து சுத்த சுவிசேஷம் தெளிவாய்ப் பிரசங்கிக்கப்பட்டது. சீர்திருத்தலுக்குப் பின் சுவிசேஷப் பிரசங்கத்திற் கென்று பிரசங்கத்தொட்டிகள் எங்கும் ஏற்பட்டன.

பிரசங்கத் தொட்டி மிகவும் விசேஷித்த இடம், ஸ்பேனர் என்ற சிறந்த பிரசங்கியும்கூட அச்சமின்றி அதில் ஒருபோதும் ஏறினதில்லை. ரிச்சார்டு பாக்ஸ்டர் (1691) என்பவர் எப்போதும் தமது அபாத்திரத்தன்மையை உணருபவராய் அதை விட்டு இறங்குவாராம். பிரசங்கத்தொட்டி போர் செய்யும் இடம். அங்கே குரு செய்யும் அநேக போர்களில் ஜெயமடையவும் தோற்றுப்போகவும் கூடும். அங்கே அவர் தேவ சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டு சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் தைரியமாய் ஏறலாம், அங்கே யுத்தம் முடிந்தவுடன் நடுக்கத்தோடும் நன்றியறிந்த ஸ்தோத்திரத்தோடும். இறங்கலாம்.

**ஞானஸ்நானத்தொட்டி**

இது புராதன கோவில்களில் இருந்ததில்லை. காரணம்: அக்காலத்தில் ஞானஸ்நானம், கோவிலில் அல்ல; பக்கத்திலிருந்த ஒரு சிறு வீட்டில் கொடுக்கப்பட்டது. 6ம் நூற்றாண்டில் தான் ஞானஸ்நானத்தொட்டி கோவில்களில் இடம் பெற்றது. ஞானஸ்நானம் சபையாகிய ஞானமாளிகைக்குப் பிரவேசம் என்று காட்டுவதுபோல் ஞானஸ்நானத்தொட்டி கோவிலின் முன்னறையில் வைக்கப்பட்டது, பிறகு கிறிஸ்தவர்கள் அதை நடுபாகத்திலும் கடைசியில் பீடபாகத்திலும் வைத்தார்கள். சபையின் பரிசுத்த கிரியைகள் பீட பாகத்தினின்று நடத்தப்படுகிறபடியால் ஞானஸ்நானத்தொட்டியும் அதனருகிலிருப்பது நலம், அது சபையார் யாவருக்கும் மகா அருமையான பாத்திரமாயிருக்கவேண்டும். ஏனெனில் அது ஞானஸ்நான உடன்படிக்கையையும் கிருபையையும் அவர்களுக்கு நினைப்பூட்டிக் குணப்படுதலுக்கும், விசுவாசத்திற்கும், ஜெபத்துக்கும், பக்திக்கும் ஸ்தோத்திரத்துக்கும் அவர்களை ஏவவேண்டும். தனியே இருந்த ஒரு கிழவி உயிரோடிருக்கிற தன் சொந்தக்காரரைப் பார்க்கத் தன் பிறந்த ஊருக்குப்போனாள். அவர்களெல்லாரும் சென்று போனார்களென்று அவள் கேட்டுத்தான் ஞானஸ் நானம் பெற்ற கோவிலுக்குள் போய் ஞானஸ்நானத்தொட்டியண்டை முழுங்காற்படியிட்டு உண்மையுள்ள கர்த்தர் மாறாதவரும் கைவிடாதவருமாயிருந்ததற்காக அவரை ஸ்தோத்திரித்தாள்.

**உடுப்புப்போடும் அறை.**

பூர்வகாலத்துவக்கிக் கோவில் சம்பந்தமாக உடுப்புகள், புஸ்தகங்கள், பாத்திரங்கள் வைக்குமிடம் ஒன்று இருந்தது. அங்கே குரு ஆராதனைக்கு முந்தி உடுத்திக்கொள்வார். இந்த அறையின் முக்கிய நோக்கமோ குரு ஆராதனைக்கு முன் தன்னை ஆயத்தப்படுத்துவதே வீண் பேச்சு, சிரிப்பு முதலியவை அங்கே இருக்கப்படாது. அது குரு தனக்காகவும் தன் சபைக்காகவும் உலகமெங்குமிருக்கிற திருச்சபைக்காகவும் வேண்டுதல் செய்கிற ஜெப அறையாயிருக்க வேண்டும். குரு தன் சொந்த வீட்டிலும் மற்ற இடங்களிலும் ஏற்கனவே ஜெபித்திருந்தாலும் அவர் இப்போது பீட ஆராதனைக்கும் பிரசங்கத்துக்கும் முன் ஜெபத்தினால் புது பெலனை அடைவது அவசியம்.

லேயே (Wilhelm Iobe) என்பவர் இவ்வறையில் குரு எப்போதும் தனித்திருக்கவேண்டும். அதற்குச் சரியான பூட்டும், முழங்கால்படியிடுவதற்கும் பலகையுமிருக்கவேண்டு மென்று வற்புறுத்துகிறார். மோ (Moe) என்பவர் பிரசங்கத் தொட்டியில் ஏறுமுன் இவ்வறையின் ஒரு மூலையில் முழங்கால் படியிடுவார். அவர் பராபரனைச் சந்தித்ததினால் அவரது முகம் எவ்வளவாய்ப் பிரகாசித்ததென்று சபையார் பார்த்து ஜெபத்தினால்

அவரது பிரசங்கம் வல்லமையுள்ளதாயிற்று என்பதை உணர்ந்தார்கள். இவ்வறையில் பாவசங்கீர்த்தனம் நடந்ததினால் பூர்வ கிறிஸ்தவர்கள் அதற்கு ஆறுதலின் அறையென்றும் பெயரிட்டார்கள். இக்காலத்திலும் சபையார் ஆராதனை முடிந்த பின் இவ்வறையில் குருவைச் சந்தித்துத் ஆலோசனைகளைக் கேட்டு அவரது போதனையையும் பெற்றுக்கொள்ளக்கூடுமானால் அது மறுபடியும் ஆறுதலின் அறை என்று அழைக்கப்படலாம்.

**கோபுரம்.**

துவக்கத்தில் கோபுரங்களைக் கோவிலோடு சேர்த்துக் கட்டாமல் தனியே கட்டினார்கள். கார்ல் சக்கரவர்த்தியின் (Charles the Great + 814) காலத்தில் கோவிலை யொட்டி மேற்கேயும் அதன் பிறகு கிழக்கேயும் கோபுரங்களைக் கட்ட ஆரம்பித்தார்கள். கோபுரம் வானத்தை நோக்கிக் காட்டுகிற விரலாயிருந்து, மேலே காணாத கண்கள் நம்மைக் கவனிக்கிறதென்று சிறியோர், பெரியோர், நல்லார், பொல்லார் எல்லாருக்கும் நினைப்பூட்டுகிறது. அது இருதயங்களை உயர்த்துங்கள், பூமியின்மேலுள்ளவைகளல்ல, மேலானதுகளைச் சிந்தியுங்கள் (கொலோ. 3, 2) என்று கூப்பிடுகிறது. அமைதியில்லாத ஆத்துமாவுக்குச் சமாதானத்தின் வழியைக்காட்டுகிறது. அது நம்மை ஜெபம்பண்ண எப்பொழுதும் ஏவுகிறது. அது கல்லில் பதிந்து வெட்டின ஜெபத்துக்கு ஒப்பிடப்படுகிறது. அது நீ வந்து பார் (அறி. 6, 1) என்றும்; இங்கே ஏறிவா (அறி.4.1) என்றும் சொல்லுகிறது. நாம் விசுவாசத்தினால் பரத்துக்கேறிப் பரமண்டலத்தில் சஞ்சரிக்க நம்மை இழுக்கிறது.

அது மேலானதை நோக்குகிற ஆசை என்கிற கிறிஸ்தவனுக்குரிய குணத்தைக் குறிக்கிறது. திருச்சபையும் தனிக் கிறிஸ்தவனும் மணவாளியின் குணத்தைக்காட்டி விழித்துத் தபராயிருந்து பரம கலியாண வீட்டை நோக்கித் தீவரிக்கிறதைக் கோபுரம் அடையாளமாகக்காட்டுகிறது.

ஒரு கோவிலுக்கு இரண்டு கோபுரங்களிருந்தால் அவை இரண்டு கைகளைப் பராபரனை நோக்கி ஏறெடுக்கிற கிறிஸ்தவனின் ஜெபத்தை நினைப்பூட்டும்.

**கோவில்மணி**

அப்போஸ்தலர் காலத்திலும் இரத்த சாட்சிகளின் காலத்திலும் கிறிஸ்தவர்கள் இரகசியமாய்க்கூடினதால் அவர்கள் கோவில் மணிகளை உபயோகித்ததில்லை. அதற்குப் பதிலாக இரகசியமாய் ஆட்களை வீடு வீடாக அனுப்பி ஆராதனையின் காலத்தையும் இடத்தையும் தெரிவித்தார்கள். கான்ஸ்டான்டீன் சக்கரவர்த்தி திருச்சபையை ஒப்புக்கொண்ட பிறகும் 300 வருஷமாகக் கிறிஸ்தவர்கள் கோவில் மணிகளை உபயோகித்ததில்லை. அந்தக் காலத்தில் தாசு மணியை அடித்துக் கோவிலுக்கு அழைத்தார்கள். மடங்களில் பகலில் குழாய் ஊதி ஜெபத்துக்கு அழைப்பார்கள். இரவில் ஒரு சந்நியாசி அறை அறையாகப்போய் சுத்தியலால் தட்டிச் சகோதரரை ஜெபத்துக்கு அழைத்தான். கோவில்மணிகளைப் பற்றி முதல் முதல் தெளிவாய்ப் பேசினவர் தூர் பட்டணத்தின் அத்தியட்சராகிய கிரகர் (Gregor Bishop of Tours + 593) என்பவர்.

604ம் வருஷத்தில் ரோமையில் அத்தியட்சரான சபினியான் (Sabinian) கோவில் மணிகளை வைக்கும்படி பிரயாசை எடுத்தும் அது கார்ல் சக்கரவர்த்தியின் காலத்தில்தான் அனுஷ்டானத்துக்கு வந்தது.

கோவில் மணியின் பல வேலைகளைக்காட்டும் லத்தீன் பாஷை வாக்கியங்களை அவற்றின் மேல் போடுவது வழக்கம். அவைகளை மொழி பெயர்த்தால், மெய்த்தேவனைக் கும்பிடுகிறேன். சபையாரை அழைக்கிறேன். குருக்களைச் சேர்க்கிறேன். செத்தவர்களுக்காக அழுகிறேன். வியாதியைத் துரத்துகிறேன். பண்டிகையை ஆசரிக்கிறேன் எனப் பொருள்படும்.

மத்திய காலத்தில் பாப்புவின் கீழ்க் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமானதை அவபக்தியால் உபயோகித்ததுபோல் கோவில் மணி, மணி அடிப்புச் சம்பந்தமாய் அநேக வீணான காரியங்களை நினைத்தார்கள். அது லுத்தரின் காலத்தில் திருத்தப்பட்டது. ஜெபவேளையைக் காட்டுவதற்குச் சூரியன் உதிக்கும் போதும் அஸ்தமிக்கும் போதும் மணியை அடிக்கிறது நலம். குருக்கள் மணியடிப்பின் நோக்கத்தையும் பிரயோஜனத்தையும் தங்கள் சபைகளுக்குக் காட்ட வேண்டும். கோவிலின் வாயென்பதுமாத்திரமல்ல. அது பராபானுடைய வாய், அவரிடமிருந்து ஒரு செய்திகொண்டுவரும் தெய்வ தூதன். அது வீட்டுக்கும் சபைக்கும் ராஜாவுக்கும் சமாதானத்துக்கும் சகல மனிதருக்குமான ஜெபத்துக்கு நம்மை அழைக்கிறது.

கோவிலின் வாய் தேவ ஆராதனைக்கு அழைக்கிறது. சபையாரின் மரண அடக்கத்தைத் தெரிவிக்கிறது. மரணத்துக்கும் நித்தியத்துக்கும் ஆயத்தப்படுத்த நம்மை ஏவுகிறது. அந்திசந்தி மணி அடிக்கும்போது எல்லாரும் தங்கள் வேலையை விட்டுப் பேச்சை நிறுத்திக் கர்த்தரின் சந்நிதானத்தில் நின்று ஜெபிக்கிறது தகுதி. இப்படி ஒவ்வொருநாளும் ஐந்து நிமிஷம் மாத்திரம் ஜெபித்தாலும் தினந்தோறும் செய்கிற இந்த ஜெபம் எத்தனை பிரயோஜனமாயிருக்கக்கூடும். இதை வீணாக்கினால் எவ்வளவு நஷ்டம். ஒருவன் இந்த ஐந்து நிமிஷங்களைச் சரியாய் உபயோகித்தால் இன்னும் அநேக நிமிஷங்களை ஜெபத்துக்கு ஒப்புக்கொடுப்பான்.

**அடையாளங்கள்**

இரத்த சாட்சிகளின் காலத்தில் கிறிஸ்தவர்கள் அடையாளங்களை அதிகமாய் உபயோகித்தார்கள். எழுதவும் வாசிக்கவும் அறியாத கிறிஸ்தவர்கள் தங்கள் அடையாளங்களினால் தங்கள் விசுவாசத்தைக் காட்டினார்கள். விரோதிகள் அவர்களைக் கண்டுபிடித்துக் கொலைசெய்ய வகைதேடினதால் அவர்களுக்கு விளங்காத அடையாளங்களை உபயோகிக்கத் தேவையாயிருந்தது. கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த அடையாளம் ஒப்புரவாக்குதலின் அடையாளமும் விசுவாசத்தின் அடைக்கலமுமாகிய சிலுவை. அது கிறிஸ்து நமக்காகச் செய்ததையும் பட்டதையும் நினைப்பூட்டுகிறது. விசுவாசம் கிறிஸ்துவையும் அவரால் உண்டான இரட்சிப்பையும் குறிக்கிற சிலுவையைப்பிடிக்கிற கைகளுக்கு ஒப்பிடுகிறது வழக்கம்.

ஆதிக்கிறிஸ்தவர்கள் சிலுவையின் அடையாளத்தை எவ்வளவு நேசித்தார்களோ அவ்வளவு அஞ்ஞானிகள் அதை இகழ்ச்சியாகப் பேசி நிந்தித்தார்கள். ஆகையால் கிறிஸ்தவர்கள் அதைப் பலவிதமாக மறைத்துக் காட்டினார்கள்.

அந்திரேயா அப்போஸ்தலன் 4 சமமான பாகங்களுள்ள சிலுவையில் அறையுண்டு மரித்ததாகப் பூர்வத்தார் சொன்னதினால் அப்பேர்ப்பட்ட சிலுவை அந்திரேயா சிலுவை என்று சொல்லப்படும். அது சகல திசைகளிலும் பரம்பவேண்டிய சுவிசேஷத்தைக் குறிக்கும்.

ஒரு சிலுவை பிடித்திருக்கிற ஆட்டுக்குட்டி தாழ்ந்த நிலைமையிலிருக்கும் கிறிஸ்துவைக் குறிக்கும்.

**ஜெயக்கொடி.** பிடித்த ஆட்டுக்குட்டி உயர்த்தப்பட்ட கிறிஸ்துவைக்குறிக்கும்.

தனித்த ஆட்டுக்குட்டி உலகத்தில் சுற்றித்திரிகிற கிறிஸ்தவனைக் குறிக்கும்.

**மீன்,** கிறிஸ்துவையும் கிறிஸ்தவனையும் குறிக்க அதிகமாய் உபயோகிக்கப்பட்ட அடையாளம். அவ்வார்த்தையின் பொருள் (மத்.4.19; 13, 47. முதலிய) மாத்திரமல்ல, விசேஷமாய் அதின் எழுத்துக்களும் ஆழ்ந்த அர்த்தமுள்ளவை. மீன் என்னும் வார்த்தைக்கு கிரேக்கப் பாஷையில் ஐந்து எழுத்துக்களுண்டு. **இயேசுக் கிறிஸ்து தேவகுமாரன், இரட்சகர்** என்கிற ஐந்து வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்தால் கிரேக்க பாஷையில் **மீன்** என்னும் வார்த்தையாகும். ஒரு கிறிஸ்தவன் தான் சந்திக்கிற முகமறியாத ஒரு மனுஷன் கிறிஸ்தவனோ இல்லையோ என்று அறிய விரும்பினால் அவன் அதைத் தெளிவாய்க் கேட்கக்கூடாது. ஏனென்றால் அவன் கிறிஸ்தவனென்று மற்றவர்களுக்கு விளங்கினால் அவனைப் பிடித்துத் தண்டிப்பார்கள். ஆகையால் அவன் ஒரு மீனின் படத்தைப்போட ஆரம்பிப்பான். அடுத்தவன் படத்தை முடித்துப்போட்டால்தான் கிறிஸ்தவனென்று அதினாலே காட்டினான்.

கிறிஸ்தவன் ஒன்றுக்கும் பயப்படாமல் பரலோகத்தை நோக்கி ஓடவேண்டுமென்று காட்டும்பொருட்டு வேகமாய் ஓடும் ஒரு மீனின் அடையாளம் உபயோகிக்கப்பட்டது.

தன் சொந்த மார்பைக் குத்தி ஊறிவருகிற தன் இரத்தத்தினால் குஞ்சுகளைத் திருப்தியாக்குகிற அன்னப்பக்ஷி திருராப்போஜனத்தில் சுய இரத்தத்தால் தம்முடையவர்களைப் போஷிக்கிற கிறிஸ்துவைக் குறிக்கிறது. என் இரத்தம் உங்கள் ஜீவன் என்கிற எழுத்தை இவ்வடையாளத்தின் கீழ் வைக்கிறது வழக்கம்.

திராட்சைச் செடியின் அடையாளத்தை ஆதிக்கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கும் கிறிஸ்துவுக்குமிருக்கிற ஐக்கியத்தைக்காட்ட அதிகமாய் உபயோகித்தார்கள். பரதீசின் பரம சந்தோஷத்தையும் அங்கே கிறிஸ்துவோடு மரித்தவனுக்குக் கிடைக்கும் நித்திய ஐக்கியத்தையும் தீவி திராட்சைக்கொடிகளைக் கல்லறைகளில் அடிக்கடி போட்டார்கள், தீவி திராட்சைப்பழம் கிறிஸ்துவின் இரத்தத்தைக்குறிக்கும்.

**கண்.** எல்லாவற்றையும் பார்க்கிற தேவனைக்குறிக்கும்.

**முக்கோண வடிவு.** பராபரனின் ஒருமையையும் திரித்துவத்தையும் குறிக்கும். முக்கோண வடிவுக்குள் எல்லாவற்றையும் பார்க்கும் 'கண்ணையாவது யூத பாஷை எழுத்துக்களில் எழுதப்பட்ட எகோவா என்கிற நாமத்தையாவது வைத்துச் சுற்றிலும் சூரியகிரணங்களைப்போட்டு இவ்வடையாளத்தைப் பிரசங்கத்தொட்டியில் பதிப்பது வழக்கம். நீதியோடும் கிருபையோடும் உதிக்கிற சூரியனாகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிற சூரிய அடையாளத்தைப் போட்டால் அதைப் பீடத்தின்மேல்வைப்பது தகுதி.

**புறா.** பல அர்த்தமுள்ள ஒரு அடையாளம். முதலாவது கபடில்லாத பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் (மத். 3, 16) ஆகையால் ஞானஸ்நானக்காரர் வஸ்திரத்திலும் ஞானஸ்நானத் தொட்டியிலும் புறாவின் வடிவத்தைப் போட்டார்கள். அல்லது தங்கத்தினால் செய்த ஒரு புறாவை ஞானஸ்நானத்தொட்டியின் மேலும் பிரசங்கத்தொட்டியின் மேலும் தொங்க வைத்தார்கள்.

சிலவேளை இவ்வடையாளம் பரிசுத்தவான்களின் ஆத்துமாக்களையும் அவர்கள் ஆத்துமாவின் சிந்தையையும் ஆத்துமாவின் கண்ணிகளையும் குறிக்கும் (மத். 10, 16). பயந்தோடும் புறா ஜெபத்தினால் உள்ளான புறம்பான நெருக்கங்களுக்கு விலகி கர்த்தரண்டை ஓடுகிற கிறிஸ்தவனைக் குறிக்கும். (சங். 57.7, 9. ஓசேயா. 2. 14) இன்னும் விசுவாசியின் ஆத்துமா விசேஷமாய் இரத்தச்சாட்சியின் ஆத்துமா இக்காலத்தின் துன்பத்தை விட்டுச் சமாதானமாய் இளைப்பாறப்போவதைக் குறிக்கும். வாயில் ஒலிவ இலை வைத்திருக்கிற புறா விசுவாசியின் நித்திய சமாதானத்தைக்குறிக்கும்படிக் கல்லறைகளின் மேல் வரையப்படும்.

முழுச் சிருஷ்டிப்பிலும் முக்கியமான மனுஷனும், வீட்டு மிருகங்களில் முக்கியமான மாடும், காட்டு மிருகங்களில் முக்கியமான சிங்கமும், ஆகாசத்துப் பட்சிகளில் முக்கியமான கழுகும் ஆகிய 4 ஜீவன்கள் 5ம் நூற்றாண்டிலிருந்த 4 சுவிசேஷகரைக் குறிக்க உபயோகிக்கப்பட்டன.

**பீடம்**, கல்லறைக்கல், சிலுவை, கோவில் பாத்திரம் முதலியவைகளில் அவைகளின் படம் போடப்படும்.

**மான்.** கிருபையின் மேல் தாகமும் தவனமுமாயிருக்கிற ஆத்துமாவைக்குறிக்கும் (சங். 42.2).

**நாய்.** உண்மையைக் குறிக்கும்.

**சேவல்**, பேதுருவை எச்சரித்து அவன் பாவத்தை அவனுக்குக் காட்டினதினால் விழிப்பைக்குறிக்கும். பெருமைக்காரரை எச்சரித்துப் பாவத்தில் விழுந்து மனஸ்தாபப்படுகிறவர்களை ஆற்றித்தேற்றும். இதைக்காட்டக் கோவில் கோபுர உச்சியில் விழித்து உதிக்கிற சூரியனைச் சந்தோஷமாய் கூவுகிற சேவலைப்போல் நாமும் காலையில் விழித்துச் சிருஷ்டிகரை ஸ்தோத்திரித்துச் சோம்பேறியாயிராமல் பகலின் முக்கியமான பாகமாகிய காலை நேரத்தை உபயோகிக்கவேண்டும். கல்லறைத் தோட்டத்தில் சேவலின் அடையாளமிருக்குமானால் உயிர்த்தெழுதல் உண்டென்றும் பிரதான தூதன் சத்தத்தோடும் பராபரனுடைய எக்காளத்தோடும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை மகிமையாய் எழுந்திருக்க அழைப்பார் என்றும் குறிக்கும், (1 தெச. 4, 16; 1 கொரி. 15, 43).

**அன்னப்பக்ஷி.** அன்னப்பக்ஷி சாகுமுன் தன் மரண வேளையை அறிந்து அதற்கேற்றாப்போல் கூவுமாம். ஆகையால் அன்னப்பக்ஷியின் படம் கோவிலிலிருக்குமானால் மரணத்தைக் குறிக்கும்.

**தென்னைமரம்**, ஓலை, பூ, காய் எல்லாவற்றையும்

ஒரு கிரீடம்போல் வைத்திருக்கிறதினால் இராச்சியபாரத்தையும் மகிமையையும் விசேஷமாய்ப் பரிசுத்தவான்களுக்கு மோட்சத்தில் கிடைக்கும் மேன்மையையும் குறிக்கும், ஒலை நித்திய ஜெயத்தையும் ஜெயத்தின் பலனையும் குறிக்கும்.

**ஒலிவக்கிளை.** ஒலிவக்கிளை சமாதானத்தையும் சிநேகத்தையும் செழிப்பையும் காட்டும் அடையாளம் (1 மோ. 8 11.)

**ரோசாப்பூ.** அமைதி, ஜாக்கிரதை என்பவைகளின் அடையாளம், அதன் இதழ் வெகு நெருக்கமாயிருந்து ஒரு இரகசியத்தை மறைக்கப் பிரயாசப்படுகிறாப்போல் இருக்கிறது. பிரதான வாசலின் மேலாவது பீடப்பாகத்திலாவது ஒரு சிறு வட்டமான ஜன்னல் வைத்து பலவர்ணக்கண்ணாடிகளைக் கொண்டு ரோசாப்பூமாதிரி அலங்கரிக்கிறது வழக்கம். அது பரிசுத்த அமைதியின் அவசியத்தை நமக்குக் காட்டும். கோவிலுக்குள் பிரவேசிக்கையில் உலக எண்ணங்கள் வீண் பேச்சுகள் எல்லாம் மௌனமாகி வாயும், இருதயமும் ஜெபத்துக்கும் ஸ்தோத்திரத் துக்கும் பரிசுத்தமாக்கப்படும். கோவிலில் நமக்குக்கிடைக்கும் பொக்கிஷங்கள் பரிசுத்த அமைதியினால் காக்கப்படவேண்டும். லுத்தர் சாஸ்திரியார் ரோசாவின் அடையாளத்தை மிகவும் நேசித்துத் தமக்கும் முழு லுத்திரன் திருச்சபைக்கும் அதை அடையாளமாகவைத்தார்.

**வானவில்.** ஆண்டவரின் கிருபையான உடன்படிக்கையையும் மாறாத பொறுமையையும் சிநேகத்தையும் குறிக்கும் (1 மோ. 1.13 ஜு).

**சாலிகள்.** பாவங்களை மன்னிக்கவும் சுமத்தி வைக்கவுமான அதிகாரத்தைக் குறிக்கும்.

**நங்கூரம்,** நித்திய ஜீவனைப்பற்றிய திடமான நம்பிக்கையையும் (எபி. 6,9) துன்பங்களில் நிலைக்கிற உறுதியான பொறுமையையும் காட்டும். ஆத்துமா சோதனைகளின் காற்றினாலும் வெள்ளத்தினாலும் இழுப்புண்டு பாவத்தின் கல்லில் மோதிச் சேதமாகாதபடிக்கு அதைத்தன் எச்சரிப்புகளினால் காக்கிற் மனச்சாட்சி சிலவேளை நங்கூரத்தினால் குறிக்கப்படும். வேறே இடங்களில் நங்கூரம் கிறிஸ்துவையும் குறிக்கும்.

**திசையறி கருவி,** அதன் ஊசி எப்போதும் வடக்கே நோக்கியிருக்கிறதினால் முதலாம் கற்பனையின்படி எல்லாவற்றையும் பார்க்கக் கர்த்தரைத் தேடவேண்டிய இருதயத்தைக் குறிக்கும்.

**வட்டம் அல்லது மோதிரம்.** முடிவில்லாமையையும் நித்தியத்தையும் காட்டும்.

**முட்கிரீடம்,** பாடுகளின் அடையாளம், பொற்கிரீடமும் தலைமேல் வைக்கும் பூமாலையும். மகிமை, மேன்மை, அரசாட்சி, ஜெயம் என்பவைகளைக் குறிக்கும் (1 பேது, 5, 4; 2 தீமோ. 4, 8 ஜு).

**அருணோதயம் J.S**

கிறிஸ்தவ

# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் ‘கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்’ மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த ‘கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்’ (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**

**ஆசிரியர்**


**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**



christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



## சேலம் மாவட்ட பகுதிகளில் 150 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற

# கல்லறைகள் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகள்


ஜே. பர்னபாஸ்,
சேலம் வரலாற்றுச் சங்கம்,


***வேண்டுகோள் விண்ணப்பம்:***

அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட பகுதிகளான அரூர், பென்னாகரம், அதியமான் கோட்டை, மற்றும் தருமபுரி ஆகிய ஊர்களில் அமைந்திருந்த தனித்தனியான ஆங்கிலேயர்களின் கல்லறைகளை (Isolated tombs of the British) பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகளுக்கான விண்ணப்பம் சென்னைப் பேராயத்தின் மூலமாக அன்றைய பிரிட்டீஷ் சென்னை அரசாங்கத்திற்கு (Government of Madras) சமர்ப்பிக்கப்பட்டது. சென்னைப் பேராயத்தின் தலைமை தியாக்கோன் வந்திக்கத்தக்க J. கார்ட்டன், M. A., (Venerable J. Gorton, M. A., Archdeacon of Madras) இதற்கான வேண்டுகோள் விண்ணப்பத்தினை அன்றைய பிரிட்டிஷ் சென்னை அரசின் தலைமைச் செயலாளர் (பொறுப்பு) மரியாதைக்குரிய D. F. கார்மைக்கேல் அவர்களிடம் சமர்ப்பித்திருந்தார். (Proceedings of the Madras Government, Ecclesiastical Department, 28th May 1874, No. 25, letter from the Venerable J. Gorton, M. A., Archdeacon of Madras, to the Hon. D. F. Carmichael, acting chief secretary to the Government, Fort St. George, dated Madras, 20th May 1874, No. 54. )

***பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகளுக்கான ஆய்வுப்பணிகள்:***

இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக சேலம் மாவட்ட நிர்வாகம் சார்பாக மாவட்டத்தின் வடக்கு பிராந்தியமான ஒசூர், தருமபுரி, அதியமான் கோட்டை, பென்னாகரம், அரூர், ஊத்தங்கரை, மற்றும் ஆத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தனித்திருக்கும் கல்லறைகள் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வுப்பணிகளின் தகவல்கள் சொல்லும் செய்திகளின்படி பார்த்தால் பல கல்லறைகள் இன்று இல்லை என்ற ஒரு அதிர்ச்சி வரலாற்றை நேசிக்கும் நமக்கு வேதனை அளிப்பதாக உள்ளது.

***ஒசூர் பகுதி:***

ஒசூரில் உள்ள அரசுக்கு சொந்தமான பங்களா முன்பாக இருக்கும் மூன்று கல்லறைகள் நல்லநிலையில் இருப்பதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த கல்லறைகள் யாருடையவை என்பது சொல்லப்படவில்லை. (Proceedings of the Madras Government, Ecclesiastical department, 9th may 1874) ஒருவேளை இவைகள் தான் தனது காதலிக்காக அரசு பணத்தில் வசந்த மாளிகை கட்டி ( Kenilworth Castle /Brett's Folly) பின்னர் பிரிட்டிஷ் அரசால் தண்டிக்கப்பட்டு, காதலிலும் தோல்வியடைந்து தனது நாயையும் சுட்டுக் கொன்றபின் தன்னையும் சுட்டு தற்கொலை செய்துகொண்டு செத்துப்போன அன்றைய சேலம் மாவட்ட கும்பினி கலெக்டர் H. A. பிரட்ஸ் (Mr. Harry Augustus Brett -period of service -1853-62) கல்லறைகளாக இருக்கலாம். இரண்டு கல்லறைகளில் ஒன்று பிரட்ஸ் உடையது, மற்றது அவரது அன்பான நாயினுடையது என்றும் சொல்லப்பட்டது. பிரட்ஸ் மற்றும் அவரது நாயின் கல்லறையை அந்த வசந்த மாளிகைக்கு எதிராக ஒரு அத்தி மரத்தடியில் தான் கண்டதாக திரு. விட்டல் ராவ் தனது தமிழகக் கோட்டைகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் (முதல் பதிப்பு 2006, பக்கம் :42)

ஆனால் பிற்காலத்தில் பாழடைந்துபோன இந்த வசந்த மாளிகையும் அதற்கு முன்பாக நிராசையில் இறந்துபோன பிரட்ஸ் மற்றும் அவரது நாயின் கல்லறைகள், பெயர் தெரியாத மற்றுமொரு கல்லறையும் என்று அனைத்தும் 1980 ஆம் ஆண்டுவாக்கில் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு அந்த இடத்தில்

SIDCO Estate வந்தது, தற்பொழுது தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்புகள் வியாபித்திருக்கிறது. ஆனால் அந்த ஆய்வில் குறிப்பிடப்பட்ட சேலம் பிரிட்டீஷ் கலெக்டர் W. E. லோக்ஹார்ட் ( Mr. Walter Elliott Lockhart, M. C. S., collector of Salem 1845-50 ) என்பவரது கல்லறை மட்டுமே தப்பி நிலைத்திருக்கிறது.

ஆனால், இவரது கல்லறைக்கு அருகில் இருந்ததாக சொல்லப்பட்ட திரு. ஜான் எட்வர்ட் பங்கெல் ( Mr. John Edward Bunkall, died 5th February 1842) என்பாரது கல்லறை, பெயர் பொறிக்கப்படாத மற்றுமொரு கல்லறை (There is another tomb, but no inscription -ஒருவேளை இது பிரட்ஸ் உடையதாக இருக்கலாம்) நாயின் கல்லறை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்க வாய்ப்பில்லை. இவைகளில் W. E. லோக்ஹார்ட் கல்லறையைத் தவிர மற்ற யாவும் இன்று இல்லை. (p. no. 173, A Manual of The Salem District in The Presidency of Madras - H. Le Fanu, Bol. 1- The District, Madras, 1883.)

### கோரி மேடு :

சேலம் மலைப்பாதை (Salem Ghaut) என்று சொல்லப்பட்டிருப்பதால், இது சேலத்திலிருந்து ஏற்காடு நோக்கிச் செல்லும் மலைப் பாதை துவங்கும் இடத்தில் உள்ள 'கோரி (கல்லறை) மேடு' வாகத்தான் இருக்க முடியும். (Grave of a person unknown at the foot of the Salem Ghaut) ஒரு இஸ்லாமிய பெரியவரின் தர்காவாக இது கருதப்பட்டு வணக்கஸ்தலமாக உள்ளது இன்று.

### தருமபுரி கோட்டைப் பகுதி (Dharmapuri Fort Glacis):

கர்னல் ஜேம்ஸ் ஐவிஸ் கல்லறை (Lieutenant Colonel James Ives Esquire, died 16th October 1819, aged 37years. A distinguished himself at the head of his corps at the battle of Mahidpore. Died of a return of fever contracted in the zealous discharge of his duty in the field- p. no. 171, Salem District Manual - H. Le Fanu, 1883) பிரிட்டிஷ் படைகளுக்கு வெற்றிகளை பெற்றுத்தந்த மாவீரனான இவரது கல்லறை நல்ல நிலையில் இருக்கிறது என்றும் அதனைச் சுற்றி உள்ள சுற்றுச் சுவருக்கு நடுவில் கல்லறைக்கு உட்புக ஒரு கேட் அமைக்க வேண்டும் என்று சேலம் பொறியாளரின் அறிக்கை சொன்னது. (Fixing a gate to the wall enclosing Colonel Ives tomb at Darampoory - from Captain H. Bailey's Report)


தருமபுரி கோட்டைக் கோயில்களான பரவாசுதேவப் பெருமாள் கோயில் எதிரே, மல்லிகார்சுனர் தகடூர் காமாட்சியம்மன் கோயில் அருகே இருந்த இந்த கல்லறை காலப்போக்கில் மண்ணில் புதைந்து இருந்த நிலையில், அந்தப் பகுதியில் சாலை மற்றும் சாக்கடை வசதிகள் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் வெட்டப்பட்ட இடிபாடுகளும் மண்ணும் கொட்டப்பட்டு இது மேலும் புதைந்துபோனது என்று எங்களுக்கு தருமபுரி வரலாற்றுச் சுற்றுலா சமயத்தில் இந்த கல்லறையைத் தேடி அலைந்த போது, அந்த பகுதி வாழ் பொதுமக்கள் தெரிவித்தனர். அந்த கல்லறை புதைந்துபோன இடத்தையும் காட்டினர்.



### பென்னாகரம் கோட்டைப்பகுதியில் இருந்த சேலம் மாவட்டத்தின் பழமையான பிரிட்டிஷ் நினைவுச்சின்னம் :

பென்னாகரம் கோட்டைக் காப்பாளர் தளபதி ஜேம்ஸ் டர்ரிங் கல்லறை (Pennagaram Fort Glacis, Captain James Turing, Commandant of the Garrison of Fort Pennagaram, captain of the 4th Battalion Native Infantry, who died on 13th July 1793) பழமையானது என்றாலும் எழுத்துக்கள் தெளிவாக இருந்தது இதன் சிறப்பு. (The oldest legible tomb in the district) முறையான கல்லறை நினைவுச் சின்னங்களை உருவாக்கும் அமைப்புகள் / கல்தச்சர்கள் கிடைக்காத காலம் அது. ஆங்கில ஆட்சியின் ஆரம்பகாலத்தில் ஆங்கிலேயர் தங்கள் இறந்தவர்களுக்கான கல்லறை நினைவுக் கல்வெட்டுக்களை அமைப்பதில் இத்தகைய இடர்பாடுகளைச் சந்தித்தனர். நமது சேலம் கலெக்டர் அலுவலகம் எதிரே உள்ள கல்லறைத் தோட்டத்தின் பழமையான நினைவுச்சின்னம் 1797 ஆம் ஆண்டைச் சேர்ந்தது, அதில் எழுத்துக்கள் தெளிவாக இல்லை. நல்ல ஆழமாக முறையாக பொறிக்கப்படாததால் காலப்போக்கில் தேய்மானம் அடைந்து இப்பொழுது வாசிக்க முடியாதபடி உள்ளது. அன்றும் கூட இது அப்படி தெளிவாக இல்லாததால்தான் இந்த கல்லறையை திரு. லீ பானுவும், திரு. J. J. காட்டனும் தங்கள் நூல்களில் குறிப்பிடவில்லை.

பென்னாகரத்தில் உள்ள இந்த கல்லறையை லண்டன் பாக்சா (British Association for Cemeteries in South Asia) அமைப்பின் ஆயுள் உறுப்பினர் திரு. பிரியான் ரசெல் (Mr. Brian Russel)கடந்த நவம்பர் 2017ல் தேடியலைந்து கண்டுபிடிக்கமுடியாமல் திரும்பி வந்தார். நாங்களும் கடந்த 2022ல் மே 24 ஆம் நாள் மேற்கொண்ட தருமபுரி கிருஷ்ணகிரி வரலாற்றுச் சுற்றுலாவில் இந்த கல்லறையை தேடியலைந்தபோது, அது அழிந்துவிட்டது என்றும், அது இருந்த பகுதி போடூர் என்பதும், பாதர் குட்டு (Father medu) என்ற இடத்தில் கல்லறை இருந்ததாகவும், பல ஆண்டுகளுக்கு முன் அது அகற்றப்பட்டுவிட்டது என்றும், ஒருவர் சொன்னார். ஆனாலும், கடந்த 2007ல் இங்கே பென்னாகரம் கோட்டையின் அடித்தளமும், இராணுவ சிற்றாலயத்தின் ஒற்றைச் சுவரும் அனாதியாக வெட்ட வெளியில் இந்த கல்லறையும் இருந்ததாகவும், இந்த பகுதியில் பல வீடுகள் இருந்ததாகவும், பாக்சா குறிப்பு சொல்கிறது.




இந்த கல்லறைக்கு சுற்றுச் சுவரும் உட்புக வாசலும், அதற்கு கேட்டும் 1874 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவேறியது என்பது எழுத்தில் மட்டும் உள்ளது. (Building a wall with gate round Captain Turning's tomb at Pennagarum at the expense of Rs. 87/-)

### *அதியமான் கோட்டையிலுள்ள இரண்டு கல்லறைகள்:*

1. மிஷனெரி தாய் தெரசியா யோங்கர் கல்லறை (Mrs. Therezia Younker, (57), wife of late Mr. John Younker of the Society for the Probagation of Christian Knowledge -S. P. C. K.) இந்த கல்லறைக்கு 1874 ஆம் ஆண்டின் திருப்பணிகளில் கல்லறையைச் சுற்றி பலமான சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. (Building a wall round Mrs. Younker's tomb at Adamancottah at the expense of Rs. 107/-) ஆனால் இன்று இந்த கல்லறையைச் சுற்றிலும் கட்டப்பட்டிருந்த சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கிறது. சமீபத்தில் அதன் சாசன கல்வெட்டிற்கும் ஆபத்து ஏற்பட்டு அதை நாங்கள் மீட்டு, அதை மீண்டும் வரலாற்றுச் சின்னத்தில் பதித்து வைத்ததும், இன்றும் இந்த கல்லறை ஆக்கிரமிப்பின் / அழிவின் விளிம்பில் இருப்பதையும் நீங்கள் முன்னமே அறிந்திருக்கிறீர்கள் (காண்க: **கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் -ஜீன் 2022** -சேலம் வரலாற்றுச் சங்கத்தின் முயற்சியால் காப்பாற்றப்பட்ட கிறிஸ்தவ மிஷனெரியின் கல்லறை)
2. கேப்டன் J. W. ரம்சே கல்லறை: (Captain John William Rumsey, 44th Regiment Native Infantry, died on 21st march 1846, aged 40years. There is a monument to his memory in St. John's Church, Trichinopoly. ) ஆக்கிரமிப்பின் பிடியில் இருக்கும் இந்த கல்லறையில் ஒவ்வொரு மார்ச் மாதம் 21 ஆம் தேதியும் அந்த பகுதியில் உள்ள தருமபுரி முன்னாள் படைவீரர்கள் நலச்சங்கத்தினரும், நாங்களும் இணைந்து நினைவுநாள் அனுசரிப்பில் ஈடுபட்டுவருகிறோம். இந்த கல்லறைக்கு கேட் மட்டும் புதியதாக 1874 ல் அமைக்கப்பட்டு திருப்பணிகள் நிறைவேறியது ( Fixing a gate to the wall enclosing Captain Rumsey's tomb at Adamancottah at the expense of Rs. 18/-) ஆனால் இன்று கேட் இல்லை, சுற்றுச் சுவர் சேதமாய், ஆக்ரமிப்பின் பிடியில் இந்த கல்லறை இருக்கிறது.

### *அன்று இருந்த சில ஆங்கிலேயர் நினைவுச் சின்னங்கள்:*

1. ***ஊத்தங்கரை இருமாத்தூர் கல்லறை:*** பிரிட்டீஷ் கிழக்கிந்திய கம்பெனி மேஜர் (காலஞ்சென்ற) கன்னிங் என்பாரது 7 வயது மகன் பிரிட்ஜ்மேன் கல்லறை ( Octavius Orlando Bridgeman, died 28th December 1846, Aged 7 years, son of the late Major Gunning of the 10th Regiment Native Infantry) இந்த கல்லறைக்கு 1874 ஆம் ஆண்டுசுற்றுச் சுவரும், உட்புக வாசலும், அதற்கான கேட்டும் அமைக்கப்பட்டது. (Building a wall, with gate way and a gate, round the tomb of Gunning's child at Yerrumuttoor at the cost of Rs. 80/-) இந்த கல்லறை ஒரு மிட்டாதாரின் நிலத்தில் இருந்தது என்று ஆய்வுப்பணி அறிக்கை சொன்னது. இன்று இதன் இருப்பு கேள்விகுறிதான்.
2. ***அரூரில் உள்ள பிலென்கின்ஸ் சோப் கல்லறை:*** ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பொதுப்பணித் துறை பொறியாளராக இருந்த திரு. லூயீஸ் பிலென்கின்ஸ்சோப் கல்லறை, இது 1874 ஆம் ஆண்டின் ஆய்வுப் பணிகளின்போது நல்ல நிலையில் இருந்ததாகவும், இதனைச் சுற்றி இரும்பு கிராதி வேலைப்பாடுகள் நல்லநிலையில் இருந்ததாகவும் அந்த அறிக்கை தெரிவித்தது. (The Acting Head Assistant Collector inspected it on the 27th June and I on the 20th of January last. It was on both occasions in very good order. It is protected by an Iron railing, which is in an excellent state of preservation. ) தற்பொழுது இதன் நிலை ஆய்விற்குரியது.

   இவரின் நினைவாக சேலம் ஏற்காடு தூய திரித்துவ தேவாலயத்தில் ஒரு நினைவுக் கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது. (Louis Blenkinsop Esquire, Engineer, Department Public Works, died 23rd October 1861, aged 34years, buried at Harur. )
3. ***சேலத்திலிருந்து ஆத்தூர் செல்லும் சாலையின் ஓரத்தில் இருந்த கோல்யர் நினைவுச் சின்னம் :*** திரு. கோல்யர் என்பவரின் நினைவாக அமைக்கப்பட்ட இது ஒரு நினைவுச் சின்னம் மட்டுமே என சொல்லப்படுகிறது. இது நல்ல நிலையில் இருப்பதாக அந்த ஆய்வுப் பணிஅறிக்கை தெரிவிக்கிறது. (Commemorative Monument to Mr. Collyer on the Road from Salem to Ahtur ) இதன் இருப்பு பற்றிய கூடுதல் தகவல்கள் கிடைக்கவில்லை.







### *முடிவுரை :*

அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தில் உள்ள ஓசூர், தருமபுரி, பென்னாகரம், அதியமான் கோட்டை, ஊத்தங்கரை, அரூர், மற்றும் ஆத்தூர் ஆகிய பகுதிகளில் உள்ள தனியாக நிற்கும் கல்லறைகள் (Isolated Tombs) இவைகள் தேவாலயங்களின் பார்வையில் இல்லாமல் தனித்தனியே பல்வேறு இடங்களில் இருப்பதால் 25 ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்படி பழுதுபார்த்து நிலைநிறுத்தும் திருப்பணிகள் சென்னை மாகாணத்தின் சமயம்சார்ந்த துறை (Ecclesiastical Department of Madras Government) மூலமாக நிறைவேற்றப்பட்டு வந்திருப்பதை இந்த கட்டுரை விளக்குகிறது. சென்னைப் பேராயம் இதற்கான விண்ணப்பத்தை அரசிற்கு சமர்ப்பித்தப் பிறகு, இதற்கான ஆய்வுப்பணிகள் பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் துணை ஆட்சியர்களால் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட தலைமைப் பொறியாளரின் பரிந்துரை மற்றும் திட்ட மதிப்பீடும் சென்னைப் பேராயத்தின் தலைமை தியாக்கோன் மூலமாக சென்னை மாகாண கவர்னர் ஒப்புதலுக்கு அனுப்ப தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கவர்னரின் பார்வைக்கு வைக்கப்படும் இந்த அறிக்கையை கவர்னர் ஆய்வு செய்து, பணிகளைத் துரிதமாக நிறைவேற்ற பொதுப்பணித் துறைக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதையும் நாம் அறியமுடிகிறது.

இப்படி தேவாலயங்களும், அரசின் சமயம் சார்ந்த துறையும் கல்லறைகளை குறிப்பிட்ட கால இடைவெளியிலும் அல்லது சேதங்களை பார்வையிட்ட தருணங்களைத் தொடர்ந்தும் பழுதுபார்த்து நிலைநிறுத்தும் பணிகளை நிறைவேற்றி வந்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. ஆனால் இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு ஸ்தல திருச்சபைகளும், பேராயங்களும் இந்தப் பணிகளைக் கைவிட்டதன் விளைவே தற்பொழுது நாம் காணும் ஆக்கிரமிப்புகளும், கல்லறைகள் காணாமல் போவதும் ஆகிய வரலாற்றுச் சேதங்கள். இப்போதைய நிலையில் தப்பிப்பிழைத்து இருக்கிற நினைவுச் சின்னங்களையாவது வரலாற்றின் சாட்சிக்காக பாதுகாக்க தீவிர நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்; இது நம் அனைவர் மேலும் விழுந்திருக்கும் கடன். அநேக நவீன நெகேமியாக்கள் நம்மிடையே எழும்ப ஆண்டவரை வேண்டிக் கொள்வோம்.




# கோவிலின் உபயோகம்

J.S

கோவிலின் நோக்கம் சபையாரின் எழுப்புதல். ஆகையால் அதற்கு எதிரிடையான கூட்டங்கள் அங்கே நடக்கிறது தகாது.

கிறிசொஸ்தம் என்கிற போதகர் அப்போஸ்தலரின் காலத்தைக்குறித்து விசனத்தோடு சொன்ன வார்த்தை இப்படியாக ஞாபகமாகிறது.

'அப்போஸ்தலரின் காலத்தில் சாதாரண வீடுகள் கோவில்களாக உபயோகிக்கப்பட்டன. இக்காலத்திலோ கோவில் ஒரு சாதாரண வீட்டைப்போல் உபயோகிக்கப்படுகிறது' கோவிலில் படுத்துக்கொள்ளவும், கமிட்டி என்ற பெயரில் சண்டையிடவும், சாப்பிடவும் தகாத பேச்சுகளைப் பேச இடம் கொடுத்தல் ஆகாது, ஆராதனை சமயங்களில் மரியாதையாய் உட்கார்ந்து, பாட்டுப்பாடும்போது கூடப்பாடி, நிற்க வேண்டும் போது களைப்பாயிருந்தாலும் நின்று ஜெபங்களில் முழங்காற்படியிட்டு ஜெபித்து ஆராதனையின் ஒழுங்குக்காகப் பிரயாசைப்பட வேண்டும்.

கோவில் அளவைப்பார்த்தால் கோவில் சபையாரின் தொகைக்கு மகா பெரிதாகவும் மகா சிறிதாகவும் இருக்கக்கூடாது. மகா பெரிதாயிருந்தால் ஆராதனை சமயங்களில் பாதி கோவில் காலியாயிருக்கும். அதிகச் சிறிதாயிருந்தால் அதினால் பல சபையார் வரத் தடைபடக்கூடும். கோவில் அதிக சிறிதாயிருந்தால் சபையார் பிரயாசப்பட்டு அதைப் பெரிதாக்கவாவது ஒரு புதுக்கோவிலைக் கட்டவாவது ஏற்பாடு செய்யவேண்டும். இது குருமார்களின் வேலை ஆனால் பெருமைக்கு ஆசைப்பட்டு தேவைக்கு மிகப்பெரியதாக திட்டமிட்டு பல இடங்களில் ஆலயம் கட்டப் பட்டாமல் பாதியில் நிற்கின்றது.

கோவிலின் விசேஷித்த அலங்காரம் அதை நிரப்புகிற சபையார், காலியாயிருக்கிற ஒவ்வொரு இடமும் குருவுக்கும் சபையின் சிநேகிதருக்கும் துக்கத்தை உண்டுபண்ணும். ஆனால் அப்பேர்ப்பட்ட ஒவ்வொரு இடமும் அவர்களை ஜெபத்துக்கு ஏவவேண்டும், அது குருவுக்குக் குணப்படுதலுக்கு ஏவுகிற ஒரு பிரசங்கமாயிருக்கும். குரு தன் பிரசங்கத்தினாலும் நடக்கையினாலும் சபையாருக்குத் தெளிவாய் குணப்படுதலைப் பிரசங்கிக்கவில்லையானால், சபையார் ஆராதனைக்கு வராமல் கோவிலைக் காலிபண்ணுகிறதினால் அவருக்கு குணப்படுதலைப் பிரசங்கிப்பார்கள்.


கோவிலும் அதின் சகல தட்டுமுட்டுகளும் எப்போதும் சுத்தமாயிருக்கவேண்டும். ஒட்டடை, காகிதத் துண்டுகள் முதலியவை அங்கே இருக்கக்கூடாது, அது ஒரு மேட்டில் மேற்குக்கிழக்காக கட்டப்படலாம். அதுக்குச் சமீபமாக சபையார் குருவுக்கு ஒருவீட்டைக்கட்டவேண்டும். கோவிலும் கல்லறைத் தோட்டமும் குருவின் வீடும் ஒன்றுக்கொன்று சமீபமாயிருக்கிறது சபையாருக்கும் குருவுக்கும் பிரயோஜனம்.

நெடுந்தொடர் -21

*வரலாற்று நாவல்*

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

**முனைவர் ஜான்சி பால்ராஜ்,**
திருநெல்வேலி



ஏய்... தொரைராசு மவனே, நீ இங்கேயா இருக்க? நான் உன்ன இப்பந்தான கெழக்கே மாரியப்பன் வயல்ல பார்த்துட்டு வாரேன். அதுக்குள்ள நீ எப்படி இங்க... !? என்றவன் தான் கடந்து வந்த வயல்களை மிரட்சியோடு திரும்பி பார்த்தான். ஓங்கிய அவனது சத்தம் நாற்று நட்டுக் கொண்டிருந்தவர்களை நிமிர்ந்து பார்க்க வைத்தது. அவனது இடுப்பில் கிழிய தொடங்கிய கந்தலான ஒரு துணியை மிக நேர்த்தியாக மடித்து கோவணமாக்கி கட்டியிருந்தான். இடது தோளில் மண்வெட்டியை வைத்துப் பிடித்திருந்தான். வரப்பில், தாடையில் கைவைத்தபடி பிழுந்தவாய் மூடாமல் அந்த துரைராசு மகனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆகாக்.. க்ககா.. . க்காக்.. . என்று கெக்கலிட்டு சிரித்தான் அந்த வாலிபன். ஒல்லியான, உயரமான தேகத்தோடு இரண்டு கையிலும் நாற்றைப் பிடித்துக் கொண்டு முன்னும் பின்னும் விழுந்து விழுந்து சிரித்தான். நாற்றுக்கட்டு அவன் இரு தொடைகளிலும் பட்டுப் பட்டு சேறாக்கியது. அவனது சிரிப்பு அங்கிருந்த எல்லோரையும் தொற்றிக் கொண்டது.

ஆனால் வரப்பில் நின்று கொண்டிருந்த கோவணக்காரனால் சிரிக்க முடியவில்லை. ஒரு அமானுசியம் சிரிப்பதாகவே மிரண்டு

ஒவ்வொருவரையும் கூர்ந்து பார்த்தான். ஏலே.. . நான் உன்னை மாரியப்பன் வயல்ல செத்த நேரத்துக்கு முன்னால பார்த்தேன்ல... பெறவு எப்படி.. . அப்பாவியாய் வந்த வழியை திரும்பி பார்த்தான்.

மீண்டும் சிரிப்பு சத்தம் ஓங்கியது. சத்தியமா சொல்லுதம்ல.. . நம்புங்கல ஏய்.. . பெயவுள்ளயளா.. . சொன்னா கேக்க மாட்டிய, என்னை கிருக்கன்னு நெனைக்கிய.. . இருங்கல நான் இப்ப வாரேன்.. என்றவன் தான் வந்தவழியே வேகமாக நடந்தான்.

போ.. . போ.. . முத்தண்ணே, அங்க என்னமாதிரியே ஏதாவது முனி நின்னிட்டிருக்கும். பேசிட்டு வா என்றபடி குனிந்து மீண்டும் நடத் தொடங்கினான். முத்துவின் பேச்சை ஒருவர் கூட நம்பாமல் போனதற்கு காரணம், அவனது புனைப்பெயர் ஏழுவண்டி. ஒரு விசயத்தை ஏழுவிதமாக திரித்துப் பேசி நம்ப வைப்பதில் கில்லாடி. மூன்று வயல்களைத் தாண்டி சென்றவன், நான்காவது வயலில் நாற்றை கையில் வைத்துக் கொண்டு அதே தொரைராசு மகன் நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவனை அறியாமல் வலது கையை நீட்டி.. . . ஏய்.. . ஏல.. . . நீ.. . என்று ஏதோ சொல்ல வந்தவன் கால் தடுமாற வாய்க்காலுக்குள் விழுந்தான். வயல்களில் நடுவையில் நின்று கொண்டிருந்த எல்லோருக்கும் சத்தம் கேட்டு பார்த்தனர்.

ஒருத்தன் மட்டும் சேற்றை எதிர்த்துத் தள்ளி விழுந்தவனை நோக்கி நடந்து வந்தான். என்ன முத்தண்ணே இப்படி உழுந்துட்டீர், நடக்கத்தெரியாதவன் புதுசா வரப்புல நடக்க மாதிரி. மம்புட்டி முதுவுல வெட்டியிருந்தா என்னாயிருக்கும் ஓய்.. . ? என்று சொல்லியபடி அருகில்வந்தான். அதற்குள் முத்து சுதாரித்து எழுந்து வரப்பில் உட்கார்ந்தான்.

அது ஒண்ணுமில்லப்பா.. . நம்ம பனிசகுளம் தொரைராசு மவன் இருக்கான்ல.. அந்தப்பையன், நம்ம பெரியவரு மேற்கு வயல்ல நட்டுகிட்டு நிற்கான். ஆனா, இங்க உன் பெறத்த திரும்பி பாரு.. . அந்த வெள்ளையப்பன் வயல்ல.. . இங்கயும் நிற்கான்.. . என்று கையை நீட்டி காட்டவும்.. . வந்தவன் அவன் காட்டிய இரண்டு திசையையும் திரும்பி பார்த்தான். மேற்கு வயல் இங்கிருந்து பார்க்க தெரியாது. அடுத்த வயலில் நின்றவன் தெரிந்தான். ஆமா.. . இது தொரைராசு மகன் ரங்கனே தான். ஆனா, இவன் அங்க எப்படி இருக்க முடியும் என்றவன் நமட்டு சிரிப்பு ஒன்றை வெளிப்படுத்தி மெல்ல அவனை பார்த்தான்.. ,

இங்க பாருல சடையா. நீயாவது என்ன நம்பு. மாரியாத்தா மேல சத்தியமா சொல்லுதமில்ல. நான் அங்கேயும் இவனைப் பார்த்திட்டுதான் வாரேன். நீ நம்பாட்டா வா எங்கூட. என்று கோவணத்தை சரிசெய்தபடி அந்த வயலைப் பார்த்து வேகமாக நடந்தான். மழையில் நனைந்த மண் உருவம் ஒன்று நடந்து செல்வதைப் போலிருந்தது. சேற்றை கழுவிட்டுதான் போயம்பா அந்த வாய்க்கால்ல.. . பக்கத்து வயலில் ஒருவன் சிரிப்பை அடக்க முடியாமல் சொல்லிவிட்டு குனிந்து கொண்டான்.

சடையன் மேலே ஏறாமல் அதிலேயே நின்றிருந்தான்.. . இந்த ஏழுவண்டியை யார் நம்புவது? ஏய். . . வாப்பா எங்கூட.. . என்று திரும்பி பார்த்தான் முத்து. அண்ணே நான் இப்ப செத்த நேரத்தில வந்திடுறேன் என்று சொல்லி விட்டு முத்துவை பின் தொடர்ந்தான் சடையன். வயலை நெருங்கியதும், ஏய் தொர்ராசு மவனே.. . . எலேய்.. . என்று கூப்பிட்டான்.

நட்டுக்கொண்டிருந்த எல்லோருமே நிமிர்ந்து பார்த்தனர். நீ.. . தொரைராசு மவன் தானே.. . என்று கை நீட்டினான். முன்பு பார்த்த மேற்கு வயலில் நின்றிருந்தவனைப் போலவே இவனும் விழுந்து விழுந்து சிரித்தான்.. . ஆக்கக்கா.. . க்காக்கா.. அஆக்கா.. . . என்று.

ஏல.. . ஏம்ல சிரிக்கா இப்பிடி. சிரிக்காதல.. . நிறுத்து.. என்னை என்ன கோட்டிக்காரன்னு நெனைச்சியா. என்றான் கோபம் பொங்க. இல்ல முத்து.. . இவ்வளவு நேரமும் இவனைப் பற்றின கதைதான் இங்கயும் ஓடிட்டு இருந்துச்சி. நாங்களும் அப்படிதான் இவன்கிட்ட கேட்டோம். இவன் அந்த பனிசகுளத்து ரங்கன் இல்ல. டோனாவூர் பையன். அங்கொரு பிள்ளைகள் விடுதி இருக்குதுல்லா அதில் வளர்ந்த பையன். இவன் பேரு பவுலு.

அப்படியா.. . . ? ஆமா ஒரு ஆள் மாதிரி உலகத்துல ஏழுபேர் இருப்பாவன்னு சொல்லுவாவல்லா. நீ கேட்டதில்லையா முத்து. மதியம் வேலைய முடிச்சிட்டு அந்த ரங்கனை போய் பார்க்கணுமுன்னுதான் இந்தப் பையனும் சொல்லிட்டு இருந்துச்சு.

அப்படியா.. . . இப்படி அச்சு அசலா ஒரே மாதிரி நான் எங்கேயும் பார்த்ததே இல்ல. இவன் சிரிப்பும் ரங்கனைபோலவே இருக்கு. என்றதும் டோனாவூர் பையனுக்குத் தன்னைப் போலவே இருப்பதாக சொல்லும் அவனைப் பார்க்க ஆசை கூடியது.

மதியம் உணவு இடைவெளியில் அந்த டோனாவூர் பவுலும் அவனோடு நடுவையில் இருந்தவர்களில் இரு ஆண்களும் சேர்ந்து ரங்கனைப் பார்க்க மேற்குப் பக்க வயலை நோக்கி புறப்பட்டனர். ரங்கன் கால்வாய் தண்ணீரில் கைகால் கழுவிக் கொண்டிருந்தான். ரங்கா.. . இங்க பாருல.. . உன்ன அப்படியே உரிச்சு வச்சமாதிரி ஒருத்தன.. . என்றான் பவுலோடு வந்து கொண்டிருந்த ஒருவன். கையில் தண்ணீரைக் கோதி முகத்தைக் கழுவிய ரங்கன் நிமிர்ந்து பார்த்தான். கண்ணாடியில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்ததைப் போல இருந்தது.

இருவரும் சில வினாடிகள் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டே நின்றனர். பிறகு மௌனம் கலைந்து சிறு புன்னகையை உதிர்த்து விட்டு ஆமா இவியளும் என்னை மாதிரிதான் இருக்காவ என்றான் ரங்கன். டோனாவூர் பவுலுக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல்.. . ம்ம்.. ம்.. . என்று சிறுவனைப் போல ஆர்வமாய் தலையசைத்தான். ஆமா.. . ஆனந்தமாக இருக்கு எனக்கும் என்றான் பவுல். அவனது பேச்சுமொழி மற்றவர்களது பேச்சு மொழியை விட வித்தியாசமாக இருந்தது.

ஏமியின் காப்பகத்தார் தனியொரு சமூகம் போல் வாழ்ந்து வந்ததால் அவர்களது தமிழ் பேசும் விதம் டோனாவூரைச் சார்ந்த பகுதிகளின் வட்டாரவழக்குப் பேச்சிலிருந்து வேறுபட்டே இருந்தது. தமிழ் பேசும் ஆங்கிலேய மிஷனெரிகளோடு பேசிப் பழகும் அவர்களது பேச்சுமொழியும் வாழ்க்கை முறையும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு இருந்ததில்

ஆச்சரியப்படுவதற்கில்லை. வெளி உலகத்தோடு அங்குள்வர்களுக்கு அதிகமான தொடர்பு கிடையாது. ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் வெளி வேலைகளுக்கு செல்ல அனுமதியளிக்கப்பட்டது. இந்தப் பவுலுக்கு விவசாய வேலைகளில் அலாதி பிரியம். நடுவைக்கும் அருப்புக்கும் வெளி வயல்களுக்கு வேலைக்கு செல்ல ஏமியிடம் கெஞ்சி அனுமதி வாங்கி விடுவான்.



காப்பகத்திற்கென்று ஏமியால் வாங்கப்பட்ட பல ஏக்கர் வயல் நிலங்கள் டோனாவூருக்கு அருகில் இருந்த சுற்று வட்டாரங்களில் இருந்தன. அவற்றில் விளையும் நெல்லும் புல்லும் தான் அவர்களுக்கும் அவர்களது கால்நடைகளுக்குமான உணவு. அதில் வேலை செய்வதற்கு சுற்று வட்டாரங்களில் உள்ளவர்களும் காப்பகத்தில் வளர்ந்த இளைஞர்களும் செல்வர். பெண்கள் யாரையும் அவர்களே விரும்பினாலும் வேலைகளுக்கு ஏமி அனுப்புவதில்லை. தங்கள் வயல்களில் வேலைக்கு ஆட்கள் தேவைப்படாத போது பவுலைப் போல வெளியே சென்று வேலை செய்வதில் ஆர்வமுடைய இளைஞர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அன்றைய வேலை முடிந்து ரங்கன் வீட்டிற்குள் நுழையும் போதே தான் பார்த்த பவுலைப்பற்றி கூற வேண்டும் என்ற ஆசையில், அப்பா.. . . வயக்காட்டில் இன்னைக்கு ஒரு பெரிய கதை என்றான். கட்டிலில் படுத்திருந்தார் துரைராசு. என்னப்பா கதையது, வந்ததும் வராததுமா?என்றார்.

ரங்கன் கட்டிலுக்கு அருகில் வந்து அமர்ந்தான். கதை கேட்க அமர்ந்திருக்கும் குழந்தையின் பாவம் அவன் முகத்திலிருந்தது. அப்பா இன்னைக்கு.. . . புதுகுடியிருப்புக்கு நான் போனமில்ல நாத்து நடதுக்கு? ஆமா.. . . அதுக்கென்னப்பா இப்போ? என்றார் துரைராசு. அங்க என்ன மாதிரியே ஒருத்தன் நட வந்திருந்தான். அப்படியா யாருப்பா அது? என்ற துரைராசு திரும்பி சற்று வியப்போடு மகனைப் பார்த்தார்.

அவன் டோனாவூர் விடுதியிலிருந்து வந்திருந்தான், அப்படியே என்னைப் போலவே இருந்தான். என்றதும் துரைராசு வெடுக்கென்று எழுந்து உட்கார்ந்தார்.

என்னாச்சுப்பா. என்றான் ரங்கன். அது ஒன்னுமில்ல ரங்கன். நீ சொல்லு, யாரது? என்றார். ஏம்பா.. . . ஒரு மாதிரியா ஆயிட்டிய, முகமெல்லாம் ஏன் திடீர்னு இப்படி வேர்க்குது? என்றான் அவர் முகத்தைப் பிடித்து திருப்பியபடி. அதெல்லாம் ஒன்னுமில்ல ரங்கா. உன்ன மாதிரி அப்படியே இருக்கிறதா சொன்னல்ல அதான். சரி நீ போய் சோறு போட்டு சாப்பிடு, பெறவு வந்து பேசு பசியா இருப்பா.. போ என்றார்.

சரிப்பா. இப்ப உங்களுக்கு காச்சல் எப்படியிருக்கு.. ? என்று கழுத்தில் கைவைத்துப் பார்த்தான். ம்.. . . வெள்ளன மாதிரி அதிகமா இல்லப்பா. இப்ப காச்ச விட்டுருச்சி. சரி நீங்க படுங்கப்பா. நான் உங்களுக்கும் சோறு போட்டுட்டு வரட்டா? என்ற ரங்கன் கட்டில் காலைப் பிடித்தபடி எழுந்தான்.

துரைராசு மனைவி இறந்து ஐந்து வருசமாச்சு. அந்த ஊருக்கே முடி திருத்தும் ஒரே நாவிதர் தொரைராசுதான். முடி வெட்டுபவர் மட்டுமல்ல யாருக்காவது காய்ச்சல் வந்தா முதல் மருத்துவரும் தொரைராசு தான். காய்ச்சல் என்றாலே கிராமத்து ஊர் மக்களின் ஒரே கணிப்பு, அது அவங்க ஊர் எசக்கி, மாரியாத்தா, சமீபத்தில் செத்துபோனவர்கள் தான் பயங்காட்டி விட்டதாக நினைப்பது.

தொரைராசு நாடி பிடித்துப் பார்ப்பார். என்னம்மா எங்க போய் பயந்தா? சொப்பனத்துல இசக்கி வந்தாளா? இந்த அடி அடிக்குது நாடி. ஒரு திருநீரு அடிச்சிட்டா இந்த கள்ளக்காச்சல் உடனே உட்டுரும் தாயி என்பார். சரி என்றால், அந்த வாரத்தில் வெள்ளி, செவ்வாய் இரண்டு நாட்களில் எது அருகில் உள்ளதோ அதை முடிவு செய்வார். இரவில் துரைராசு வருகைக்காக அந்தக் குடும்பமே காத்திருக்கும். காய்ச்சல் கண்டவனை சுற்றி வீட்டார் எல்லோரும் அமர்ந்திருப்பர். துரைராசு வந்ததும் எல்லோரும் அகன்று கொள்வர். நீண்ட வெண்தாடி வைத்திருப்பார். அவர் முடியை திருத்த அங்கு வேறு ஆள் இல்லையே!

பெரிய சுளவு ஒன்றை கவிழ்த்தி அதில் முழுவதும் திருநீரு பூசி, வெற்றிலை பாக்கையும் ஒரு முட்டையையும் சுளவின் மேல் வைத்து அந்த திருநீற்றில் எதையோ எழுதுவார். அவரது வாய் மெதுவாக முணுமுணுக்கும். பிறகு திருநீரை எடுத்து காய்ச்சல் கண்டவனின் நெற்றுயில் பூசுவார். கடைசியாக சுளவை அசையாமல் தூக்கி அந்தத் திருநீரில் ப்பூஊ. . . என்று ஊதுவார். அது வேகமாக காய்ச்சல் கண்டவனின் முகத்தில் பறந்து ஒட்டும். அந்தச் சிறிய மண்ணெண்ணை விளக்கொளியில் துரைராசும் காய்ச்சலாளியும் அமர்ந்திருப்பது முதல்முறை பார்ப்பவருக்கு பயமாகத்தான் இருக்கும். கடைசியாக சில

வேர்களின் பெயர்களைச் சொல்லி துளசியோடு சேர்த்து காய்ச்சி வெள்ளனையும் சாயங்காலமும் கொடு என்று பெற்றோரிடம் சொல்லிவிட்டு தட்சணையாக தரும் சில பைசாக்களையும் வாங்கி கொள்வார்.

ஏழை எளியவர்கள் வீட்டில், நீயே கடன்வாங்கி வச்சிருப்பா. எனக்கு வேண்டாம்மா.. . இந்த வெத்தல பாக்கு மட்டும் எனக்கு போதும் என்று சிரிச்சிட்டே போவார். அந்த ஊரில் எல்லோர் மனதிலும் அந்த தொரைராசு இருப்பார். பெரும்பாலும் முதல் திருநீரடிப்பிலேயே காய்ச்சல் சரியாகிவிடும்.

சிலருக்கு இரண்டு அல்லது மூன்றுமுறையாகும். அப்படியும் சரியாகாவிட்டால் தான் நோயிக்கும் பாரு பேயிக்கும் பாரு என்று பெரியவிய சொல்லியிருக்காவல்லா. பேயிக்கு பார்த்தாச்சு. இனி வைத்தியமும் பாக்கணும் என்று பவ்யமாக சொல்லிகொடுப்பார். அதிகமாக பேசமாட்டார். இடுப்பில் முடி வழிக்கும் கத்தியும், கத்தரிகோலும் மடக்கிய தோல் பையும் இருக்கும். சாப்பிட மறுத்து அழும் குழந்தைகளுக்கும் உறங்காமல் தொட்டிலுக்குள் துள்ளும் குழந்தைகளுக்கும் துரைராசு தான் பூச்சாண்டி. துரைராசுகிட்ட புடுச்சி குடுத்திருவேன் என்ற வாக்கியம் அந்த ஊரில் எப்போதும் எங்காவது ஒரு மூலையில் ஒலித்துக் கொண்டே தான் இருக்கும். அவர் பேயோட்டி, காய்ச்சல் சரியாகும் போது ஒருவித பயமும் மரியாதையும் துரைராசுமீது அந்த ஊராருக்கு இருக்கதான் செய்தது. தேவைக்கருதி எவ்வித வேறுபாடுமின்றி அவருக்கு எல்லோர் வீட்டிலும் இடமுண்டு.

இன்று ஏன் டோனாவூர் என்றதும் அப்பா இப்படி ஆகிவிட்டார்?. . . ஏலேய் உங்கப்பா அந்தக் காலத்துல டோனாவூர் பக்கம் போயிருப்பாரோல என்று வரும் வழியில் சொள்ளமுத்து சொன்ன கேலிப்பேச்சும் சிரிப்பும் இப்போது முள்ளாகி குத்தியது ரங்கனுக்கு.

ச்சே.. . இருக்காது. இந்த அஞ்சி வருசத்தில கூட, இவரு எந்த பெண்ணையும் கட்டணுமுன்னு நினைச்சதோ அப்படி எந்தப் பேச்சோ கூட யாரையும் பேச அனுமதிக்கல. எனக்கு என் மகன் போதும். வயசு அறுவதாக போவுது இனி எனக்கு எவளும் வேண்டாமுன்னு என் சித்தப்பன்மார்களிடம் கோபித்துக் கொண்டவர். இவரா.. . ச்சேச்சே.. . . இருக்காது.

ரங்கனின் நினைவுகள் கட்டுக்கடங்காமல் ஓடிக் கொண்டிருக்க.. . சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ரங்கா.. . . துரைராசு கூப்பிட்டார். என்னப்பா.. . . ? என்றான்.

சாப்பிட்டாச்சுன்னா இங்கவாப்பா. கொஞ்சம் பேசனும் உங்கிட்ட என்றார். சோற்றை மூடி வைத்துவிட்டு எழுந்து வேகமாக வந்தான். கட்டிலில் அதே இடத்தில் அப்படியே அமர்ந்திருந்தார் துரைராசு. அருகில் வந்து அவரது காலருகில் உட்கார்ந்தான். ரங்கா, இதுவரை உன்னிடம் ஒரு விசயத்தை மறைச்சி வச்சிருந்தேன். இன்னைக்கு அதை உங்கிட்ட சொல்ல வேண்டியதாயிற்றுப்பா.. . என்ற குரலில் சோகம் மூடியிருந்தது.

ரங்கனின் இதயம் வேகமாக அடித்தது. சொல்லுங்கப்பா.. . என்றான் இருக்கமாக. எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுப்பியா? என்னப்பா இப்படி கேட்டுட்டீங்க. என்ன சத்தியம் செய்யணும் சொல்லுங்க செய்றேன்.

அதுப்பா.. . . என் உயிர் போறவரை நீ என்னைவிட்டு பிரிஞ்சி வேற எங்கேயும் போக மாட்டேன்னு ஒரு சத்தியம் பண்ணுப்பா. இது என்னப்பா, எனக்கு அப்பாவும் அம்மாவும் நீங்க தானப்பா. எனக்கு வேற யாரு இருக்கா, இருந்தாலும் அவுங்கல்லாம் எனக்கு நீங்களாகிருமாப்பா? இல்லப்பா, என் மன திருப்திக்காக சத்தியம் பண்ணு.

சரிப்பா, என் உசுரே போனாலும் உங்களைவிட்டு நான் வேற எங்கேயும் போக மாட்டேன்பா.. . இது உங்க மேல சத்தியம் என்றான் ரங்கன். ம்.. . . என்று அமைதி காத்தான் துரைராசு.

அப்பா ஏதோ சொல்லனும்னு ஆரம்பிச்சிங்களே.. . . என்றான் ரங்கன்.

ரங்கா, நானும் உங்க அம்மாவும் உன்னை இருபது வருசத்துக்கு முன்னால் அந்த டோனாவூர் விடுதியில இருந்துதான் தத்தெடுத்துட்டு வந்தோம். எங்களுக்கு பத்து வருசமா புள்ள இல்ல. அங்க யாரோ இரட்டை குழந்தைகளை அந்த அம்மாகிட்ட கொடுத்துட்டு போய்ட்டாவளாம். தாயும் தவப்பனும் இல்லன்னு சொன்னாவ. அதில் ஒன்னு தான் நீ. இன்னொன்று தான் இன்னைக்கு நீ பார்த்த அந்தப் பையனாக இருக்கணும் என்றார்.

ரங்கனுக்கு பேச்சு வராமல் திணறினான். அப்போ நான் அனாதையா.. . . ? எனக்கு அப்பா, அம்மா கிடையாதா மனசுக்குள் கேட்டான். எதிரே இருந்த சுவற்றைப் பார்த்தபடி மேலும் கீழும் மூச்சை பெரிதாக விட்டான். அழுகையை அடக்க முடியாமல் தத்தளிப்பதை கவனித்த துரைராசு, என் மவனே, ஏன் இப்படி ஒருமாதிரி கவலைப்படுறாப்பா!? என்னால நீ கவலைபடுவதை என்னால தாங்கவே முடியாது என்றவர், சத்தமாய் அழுதார். இருவரும் கட்டிக் கொண்டனர். குழந்தையை முத்தமிடுவதைப் போல துரைராசு அவனை முத்தமிட்டார்.

ஐயோ.. சாமி, இந்த ஊரில் நீ வளர வளர.. . இங்குள்ள ஒவ்வொரு பெரியாளுங்க கிட்டையும் என் மகனிடம் அவனை நாங்க தத்தெடுத்தப் பிள்ளைன்னு சொல்லிறாதீங்கன்னு கையெடுத்து கும்பிட்டிருக்கேன். அவன் தாங்க மாட்டான்னு.. . சொல்லியழுததுமிருக்கிறேன் ரங்கா. உன் அம்மாவும் தான். இன்னைக்கு என் வாயாலயே சொல்ல வச்சிட்டான் அந்த கடவுள் என்று வாயில் துணியை வைத்தபடி விம்மினார்.

ரங்கன் அவரது அன்பில் அமைதலானான். அப்பா எனக்கு உங்க மேல இப்ப அன்பும் பாசமும் அதிகரிக்குதுப்பா. என்னைக்குமே நான் உங்களை விட்டு போக மாட்டேன்.. . . என்று அவரது கை விரல்களை கோர்த்துக் கொண்டான். தொரைராசுக்கு காய்ச்சல் முற்றிலும் நீங்கியிருந்தது.

ரங்.. ங், கா.. . .

என்னப்பா.. சொல்லுங்க.

நாளையிலிருந்து நீ அங்க நடப்போக வேணாம்பா. என்றார் குழந்தையாய். சரி.. சரி.. . நான் போவலப்பா. உங்களை விட்டுட்டு நான் எங்கயும் போகவே மாட்டேன் என்றவன் அவர் மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டான்.

**தொடரும்.**

# மரகதவல்லி அம்மையாரின் ‘முயற்சி’



ந. சூரிய மூர்த்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம் - 05

**‘முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்,’** என்னும் நீதிவாக்கியம் நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். உலகத்தில் ஒவ்வொரு மனுஷனுக்கும் முயற்சி அவசியம் என்பது **‘முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்,’** என்னும் திருக்குறளினால் தெரியவருகிறது. ஒருவன் முயற்சி உள்ளவனாய் இருந்தால், சகல பாக்கியமும் உள்ளவனாயிருப்பான்; முயற்சி இல்லாவிட்டால் தரித்திரனாகி அந்த முயற்சியே இல்லாதவனாயும் போய்விடுவான். அந்த முயற்சியானது நன்முயற்சி, தீயமுயற்சி என்று இரண்டு வகைப்படும். நன் முயற்சியானது கல்விமுயற்சி, தொழில்முயற்சி, பக்திமுயற்சி என்று பலவகைப்படும்.

கல்வி முயற்சியாவது ஒரு படிப்பை விடாமல் ஆவலோடு மேலும் மேலும் கற்பது தான். **‘கறக்கச்சுரக்கும் ஆவின்பால், கற்கச்சுரக்கும் பேர் அறிவு,’** என்னும் வாக்கியத்தின்படி நாம் கற்கக்கற்க நம்முடைய அறிவு விர்த்தியாகிக் கொண்டே வருகிறது. பாலகர் வகுப்பு தேறவேண்டுமானால் அரிச்சுவடி முழுவதும் படித்து முடிக்கவேண்டுமல்லவா? அரிச்சுவடி படிக்காத பிள்ளை எப்படி முதல் வகுப்பிற்குப்போகக்கூடும்? அ படிக்காத பிள்ளை ஆ எப்படிப்படிக்கக்கூடும்? ஒவ்வொரு எழுத்தும் முயற்சியோடு படிக்கவேண்டும். **‘இளமையில் கல்’** என்று ஔவையார் சொல்லியிருக்கிறபடியால் சிறுவர்களெல்லாம் சிறுவயதிலேயே முயற்சியாய்ப் படிக்கவேண்டும்.

தொழில் முயற்சி ஒரு வேலை எடுத்தோமானால் என்ன கஷ்ட நஷ்டங்கள் நேரிட்டபோதிலும் தைரியத்தோடு செய்தே முடிப்பதாம். இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன். ஒரு குயவனை எடுத்துக்கொள்வோம். ஒரு குடம் செய்யவேண்டுமானால் எவ்வளவு தூரம் பாடுபடவேண்டியது இருக்கிறது. குளத்திற்குப்போய் மண்ணெடுத்துப் பக்குவமாய்ச் சேறு குழைத்து கல் கட்டிகளை எல்லாம் பொருக்கிவிட்டுச் சக்கரத்தில் வைத்து வனை(னை)கிறான். அப்படி வனை(னை)ந்துகொண்டு இருக்கும்போது ஒரு பொடிக்கல்லு இருந்து அந்தக் குடத்தை உடைத்து விடுகிறது. திரும்பவும் கஷ்டத்தோடு வனை(னை)ந்து வெயிலில் காய வைக்கிறான். அப்பொழுது அது உடைந்துபோனாலும் போகும். பின்பு சூளை வைத்துச் சுட்டு அதிகமாய் வெந்து போகாதபடி பக்குவமாய் வேகவைத்து எடுத்து விற்கிறான். ஒரு குடம் வருமுன் இவ்வளவுதூரம் முயற்சி பண்ணவேண்டியதிருக்கிறது. கடவுளும் நாம் முயற்சி செய்தால்தான் அவரும் உதவி செய்கிறார் என்று ஒரு பழமொழி இருக்கிறது. இந்தப் பழமொழி வந்ததற்கு ஒரு கதை உண்டு! அதாவது:-

ஒருவன் தன் வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். போகும்போது அந்த வண்டி சேற்றில் அகப்பட்டுக்கொண்டது. அப்போது கடவுளை நோக்கிக் கூப்பிட்டான். அப்பொழுது கடவுள் அவனுக்குத்தோன்றி, **‘உன்தோளைப் பைதாவுக்குள் கொடுத்து வண்டியைத் தள்ளு. அப்புறம் நான் உனக்கு உதவி செய்கிறேன்,’** என்று சொன்னார். அப்படியே அவன் தன் தோளைப் பைதாவிற்குள் கொடுத்துத் தள்ளினான். உடனே வண்டி வெளியே வந்துவிட்டது என்று கிரேக்கருக்குள் சொல்லப்படுகிறது. இதனால் நாமே நம்முடைய தொழில்களில் நல்லமுயற்சி எடுக்கவேண்டுமென்று நாம் அறிகிறோம்!

ஒவ்வொரு தொழிலிலும் முயற்சி அவசியம். ஒருவன் சம்ஸாரியாய் இருந்தால் தன்னுடைய வேலையிலும் முயற்சியாய் இருக்கவேண்டும். குமாஸ்தாவாயிருந்தால் அதிலும் முயற்சியாய் இருக்கவேண்டும். நியாயாதிபதியாய் இருந்தால் அதிலும் முயற்சியாய் இருக்கவேண்டும். நாம் பார்க்கும் பெரிய மனிதர்களெல்லாம் தங்களுடைய முயற்சியினாலேயே

பெரியவர்களாயிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். **'முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்'**, என்றபடி ஒருவன் ஒரு சிறிய காரியத்தில் முயற்சி பண்ணினாலுங்கூட பலனடையாமல் போகிறதில்லை. ஒரு சிறிய தானிய மணியை விதைத்தால் கொஞ்சங் குறைய முன்னூறு தானியம் கொடுக்கிறது. அதையும் விதைத்தால் எவ்வளவோ தானியம் கிடைக்கும். ஒரு சிறிய மாங்கொட்டையை எடுத்து ஒரு சின்னப்பள்ளம்தோண்டி அதில் போட்டு மூடிக் கொஞ்ச நாளைக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு வந்தால், நமக்கு அது பூவாவும் வடுவாகவும் காய்களாகவும் பழங்களாகவும் விறகாகவும் இன்னும் எத்தனையோ விதமாகவும் உபயோகப்படுகிறது. இதெல்லாம் அற்ப முயற்சியினால் விளைந்த பலன் அல்லவா?

இப்படியே எந்த நல்ல தொழில் முயற்சி எடுத்தாலும் பயனில்லாமல் போகாது. அவைகளெல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல இடமில்லை.

இன்னும் ஒருவகை முயற்சி உண்டு. அதாவது பக்தி முயற்சி. நான் யாரென்றும் என்னை உண்டாக்கினவர் யாரென்றும் என்னை ஏன் உண்டாக்கினார் என்றும் அவருடைய சித்தம் இன்னதென்றும் அறிந்து, ஆத்துமாவுக்கு அடுத்த காரியங்களில் முயற்சி பண்ணுவதாம்! ஒருவனுக்கு எவ்வளவுதூரம் கல்விமுயற்சியும் தொழில்முயற்சியும் இருந்தபோதிலும் பக்திமுயற்சி இல்லாவிட்டால் ஒன்றிற்கும் பிரயோஜனப்படமாட்டான்.

பக்தி முயற்சியானது ஒருவனை நல்லவழிகளில் நடத்துகிறது. மற்றவர்களுக்கு நன்மைசெய்யும்படி ஏவுகிறது. எல்லாரோடும் அன்பாய் இருக்கச் செய்கிறது. அதாவது வேதம் முழுவதையும் நிறைவேற்றும்படி செய்கிறது. கடைசியாகப் பக்திமுயற்சியானது முத்திவுலகில் சேர்க்கிறது.

பக்தி முயற்சியானது நடக்கையிலே காண்பிக்கப்பட வேண்டும். ஜெபம் பண்ணுகிறதினாலாவது அல்லது தவம் செய்வதினாலாவது உண்டாகாது. கிரியையினாலேயே உண்டாகும்.

இதுவரைக்கும் நன் முயற்சியைப்பற்றிப் பார்த்தோம். இனி தீயமுயற்சியைப்பற்றிப் பார்ப்போம். தீய முயற்சியாவது தனக்காவது பிறருக்காவது கெடுதி உண்டாக்கும் விஷயங்களில் முயற்சியாய் இருப்பதுதான். நன்முயற்சியானது எவ்வளவோ நன்மையைத்தருகிறது. அவ்வளவு தூரம் தீயமுயற்சி தீமையை உன்(ண்)டாக்குகிறது.

இதற்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன். அரங்கன் என்று ஒரு பையன் இருந்தான். அவன் பத்தடி நீளமுள்ள ஒரு குழியைத் தாண்டப் பிரயாசப்பட்டான். முதலில் தவறி விழுந்துவிட்டான். இரண்டாம் தடவையும் பிரயாசப்பட்டுக் கால்சுளிக்கி விழுந்துவிட்டான். மூன்றாம் தடவையும் பிரயாசப்பட்டதில் கால் ஒடிந்து குழிக்குள் விழுந்துவிட்டான். இக்கதையினால் தீயமுயற்சி செய்தவன் பலன் நன்றாய் விளங்குகிறதல்லவா? **'நன்மைக் கடைப்பிடி'** என்று பெரியோர் சொல்லி இருக்கிறபடியால், நாம் தீயமுயற்சியை விட்டு விட்டு நன்மையான காரியங்களில் முயற்சியாய் இருக்கவேண்டும்.

முயற்சியானது தேவனுடைய குணங்களில் ஒன்றாய் இருந்தால், நாம் எல்லாரும் எல்லா நல்ல காரியங்களிலும் முயற்சியாயிருக்கவேண்டும்.'

இது **'கருணாநிதி இல்லத்து மரகதவல்லி அம்மாள்'** எழுதியது. இதே அடைமொழியோடுதான் இக்கட்டுரை 'தமிழகம்' இதழில் வெளியாகியுள்ளது.

தமிழ்ச்சங்கம் என்ற சொல்லைக் கேட்டவுடன் அனைவரின் நினைவிலும் வருவது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1901) மதுரையில் உருவாகிய நான்காம் தமிழ்ச்சங்கமே. ஆனால் தஞ்சையிலும் தமிழ்ச்சங்கம் ஒன்று அதே ஆண்டில் நிறுவப்பெற்று இயங்கி வந்திருக்கின்றது. ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவர் என்னும் ஜமீன்தாரால் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தப்பட்டது போலவே தஞ்சைத் தமிழ்ச்சங்கமும் பாப்பாநாட்டு ஜமீன்தார் ஸ்ரீமான் R. சுவாமினாத விஜயதேவர் என்பவரால் தொடங்கி நடத்தப்பட்டுள்ளது.


1901-இல் தொடங்கப்பட்ட இச்சங்கம் கல்லூரியும் நூலகமும் அமைத்து அங்கு மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் பணியையும் செய்துவந்தது. பின்பு 1905-ஆம் ஆண்டில் 'தமிழகம்' என்னும் பெயரில் இதழொன்றைத் தொடங்கியது. அப்பத்திரிகையின் ஆசிரியராக T. இராஜமையங்கார் என்பவர் செயல்பட்டார். 'ஆங்கிலேய ஐரோப்பிய சாஸ்திர சம்பந்தமான விஷயங்களையும் தமிழ் சம்பந்தமான விஷயங்களையும் மாத்திரமே எளிய தமிழ் நடையில் எழுதுவது என்று ஆரம்பித்திருக்கின்றோம்' என்னும் முனைப்போடு இதழ் தொடங்கப்பட்டது. அது தமிழ் நூல்கள், புலவர்களின் காலவரையறை, சங்கீதம், நாடகம், சரித்திரம், சிறுவர்களுக்கு எனப் பன்முகத் தன்மையோடு தமிழின் பல கூறுகளை உள்ளடக்கி உரைநடையும் செய்யுள் நடையும் (விசுவநாதம் என்னும் நாடகம் செய்யுள் நடையில் சஞ்சிகைதோறும் பிரசுரமானது) கலந்து வெளியானது.

அதன் 11-வது இதழில் (1905 – நவம்பர்) சிறுவர் சிறுமிகளுக்கான பக்கம் என்னும் பகுதியில்தான் 'முயற்சி' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட மரகதவல்லி அம்மையாரின் கட்டுரை வெளியாகியுள்ளது. சிறுவர்களுக்கு ஏற்ற எளிய நடையில் இடையிடையே கதைகள் சொல்லி விளக்கி, சிறுவர் எழுத்திற்குரித்தான நெறி பிறழாமல் எழுதித் தந்திருக்கிறார். இக்கட்டுரை அவரது தந்தையாரான **ஆபிரகாம் பண்டிதர்** வாழ்ந்த காலத்திலேயே வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமின்றிப் பின்னாட்களில் பண்டிதர் அத்தஞ்சைத் தமிழ்ச்சங்கத்தினை நடத்துவதற்கு உதவியாக இருந்த செய்தியும் உண்டு.

1901-இல் தொடங்கப்பட்ட தஞ்சைத் தமிழ்ச்சங்கம் ஐந்தாண்டுகளைக் கடந்த பின்னர் பல இடையூறுகளைச் சந்தித்துள்ளது. உதவியும் ஊக்கமும் குறைந்துபோய் 1906 செப்டம்பர் தொடங்கி 1907 மே வரை ஒன்பது மாதங்கள் 'தமிழகம்' இதழை நடத்தமுடியாமலும் அச்சங்கத்தின் வாயிலாக இயங்கிவந்த கலாசாலையை நடத்த முடியாமலும் துன்பப்பட்டது.

மேலும் அதற்காக அச்சங்கமே 1907-ஆம் ஆண்டு நடந்த அதன் ஆறாம் வருஷ மஹோற்சவத்தின் நிகழ்வுகளையும் செயல்பாடுகளையும் தெரிவிக்கும் அறிக்கைப் பத்திரத்தில் பகிரங்கமான மன்னிப்பையும் கோரியது.

"..ஒன்பது மாதம் கழித்து இவ்வருஷம் சூன் முதல் மறுபடியும் துவக்கி சஞ்சிகைகளை வெளியிட்டு வருகிறோம். ஒன்பதுமாதம் நாங்கள் சும்மா இருந்ததின் காரணம் எங்களுடைய ஊக்கக்குறைவே.' என்றும் 'இக்கலாசாலை இவ்வருடத்தில் நடத்தப்படவில்லை. ஏனென்றால் இதனை நடத்துவதற்குச் சென்ற வருஷத்தில் எங்களுக்கு உதவி புரிந்த பண்டிதர்கள் பல அசௌகரியங்களால் விலகிவிடும்படி நேரிட்டது...' என்றும் தங்களின் நிலையை எடுத்துரைத்ததோடு 'இந்த வருஷத்து அறிக்கைப்பத்திரம் எங்களுடைய பொறுப்பான கடமைகளை நாங்கள் மனப்பூர்த்தியாய்ச் செய்யவில்லை என்று தெரிவிக்கும். தமிழபிமானிகளான நீங்கள் எங்களை மன்னிப்பீர்களென்று நம்புகிறோம்' என்றும் கழிவிரக்கம் தோன்ற துயரத்தின் உச்சத்தில் நின்று பேசியிருந்தது.


சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம் 1 | 1905௵ நவம்பர் ௴ | நம்பர் 11.

சிறுவர் சிறுமிகளுக்கான பக்கம்.

முயற்சி.

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்," என்னும் நீதி வாக்கியம் நம்மெல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். உலகத்தில் ஒவ்வொரு மனுஷனுக்கும் முயற்சி அவசியம் என்பது "முயற்சி திருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்," என்னும் திருக்குறளினால் தெரியவருகிறது. ஒருவன் முயற்சி உள்ளவனாய் இருந்தால் சகல பாக்கியமும் உள்ளவனாயிருப்பான்; முயற்சி இல்லாவிட்டால் தரித்திரனாகி அந்த முயற்சியே இல்லாதவனாயும் போய்விடுவான். அந்த முயற்சியானது நன் முயற்சி, தீயமுயற்சி என்று இரண்டு வகைப்படும். நன் முயற்சியானது கல்விமுயற்சி, தொழில்முயற்சி பக்திமுயற்சி என்று பலவகைப்படும்.

கல்வி முயற்சியாவது ஒரு படிப்பை விடாமல் ஆவலோடு மேலும் மேலும் கற்பது தான். "கறக்கச்சுரக்கும் ஆவின்பால்,

௩௧

இப்படித் துயரத்தில் உழன்ற சங்கம் அவ்வப்போது சிறுசிறு உதவிகளைத்தான் பெற்று வந்தது. அப்படி உதவி புரிந்த தமிழபிமானிகளுள் ஒருவராக ஆபிரகாம் பண்டிதரும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றார்.

'சென்ற வருஷாந்தர மகோற்சவத்தை நடத்தி வைத்தவர்கள் பாப்பாநாட்டு ஜெமீன்தார் அவர்களும் இச்சங்கத்தலைவருமான ஸ்ரீமான் சுவாமிநாத விஜயத்தேவர் அவர்களும், ஹரித்துவாரமங்கலம் V. கோபாலசுவாமிரகுநாத ராஜாளியாரவர்களும் தஞ்சைக் கருணாநிதியாகிய M. அம்பிரஹாம் (ஆபிரகாம்) பண்டிதர் அவர்களும், முனிசிபல் சேர்மேனாகிய ஸ்ரீமான் T. D. சுவாமிநாத ஐயரவர்களுமே,' என்று நன்றி மறவாமல் அறிக்கைப் பத்திரத்தில் அவரைக் குறிப்பிட்டுச் சிறப்பித்தது.

நலிந்த சங்கத்திற்குப் பொருள் கொடுத்து உதவியவர் தந்தை என்றால் விஷயம் கொடுத்து உதவியவர் மகள். ஆபிரகாம் பண்டிதரின் மகளான மரகதவல்லி அம்மாள் பரோடாவரை சென்று தன் தந்தைக்கு உறுதுணையாக இசைச்சாதனை புரிந்தது, கருணாமிர்த சாகரத்தின் இரண்டாம் பாகத்தைப் பண்டிதரின் மறைவிற்குப் பின்பு பெருமுயற்சி எடுத்து வெளியிட்டது என்பது மட்டுமின்றி தந்தை இருந்த காலத்திலேயே எழுத்துலகிலும் இயங்கினார் என்னும் வரலாற்றுப் பதிவையும் அக்காலத்தில் தம்வீட்டுப் பெண்களை இசைத்துறையிலும் கல்விப்புலத்திலும் இயங்கவைத்த பண்டிதரின் உயரிய மாண்பையும் விளக்குவதாக இக்கட்டுரை தமிழுலகிற்குக் கிடைத்துள்ளது.

# புதுச் சுரண்டை திருச்சபை வரலாறு

ஜா. ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி



தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் தாலுகாவில் சுரண்டை நகரம் உள்ளது. தென்காசியில் இருந்து சுமார் 17 கிலோமீட்டர் தொலைவில் சுரண்டை உள்ளது. தென்காசியிலிருந்து பாவூர்சத்திரம், கீழப்பாவூர் வழியாகவும், ஆய்க்குடி- சாம்பவர் வடகரை வழியாகவும் என இரு வழிகளில் சுரண்டையைச் சென்றடையலாம். திருநெல்வேலியில் இருந்து தென்காசி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அத்தியூத்திலிருந்து நேர் வடக்கே சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் சுரண்டை உள்ளது. மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து புறப்பட்டு வரும் அனுமன் நதிக்கரையில் சுரண்டை உள்ளது.

## சுரண்டை அறிமுகம்

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பு படி 35,272 பேர் வசிக்கின்றனர். அதில் ஆண்கள் 17,488 மற்றும் பெண்கள் 17,784. 1980 இல் சுரண்டை ஊராட்சி பேரூராட்சியாக மாறியது. 21.08.2021 இல் சுரண்டை பேரூராட்சி நகராட்சியாக மாறியது. 2011 மக்கள் தொகை சார்ந்த வீடுகள் கணக்கெடுப்பு படி சுரண்டை நகராட்சியில் 9511 வீடுகள் உள்ளன.

## இந்திய அரசின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சுரண்டை கிறிஸ்தவம்

இந்திய அரசின் 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி சுரண்டையில் 3,632 கிறிஸ்தவர்கள் வசிக்கின்றனர். அவர்களில் ஆண்கள் 1773 பேர், பெண்கள் 1859 பேர். சுரண்டை நகராட்சியின் மொத்த மக்கள் தொகையில் 10.30 விழுக்காட்டினர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று பதிவு செய்துள்ளார்கள். தங்களை கிறிஸ்தவர்கள் என பதிவு செய்யாத ஏராளமானோரும் சுரண்டையில் உள்ளனர். சுரண்டை நகராட்சியில் சுமார் 1000 கிறிஸ்தவ குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள்.

## சுரண்டை – பெயர் காரணம்

சுரண்டை தொடக்க காலத்தில் ***ராஜ சூரியநல்லூர்*** என்று அழைக்கப்பட்டதாக அறிகிறோம். அனுமன் நதியின் வடகரையில் அமைந்துள்ள சுரண்டை நகரில் தோண்டிய இடங்களில் எல்லாம் நீரூற்று சுரந்து வந்ததாகவும் அதன் காரணமாக அந்த நதிக்கரையில் அமைந்த குடியிருப்பு சுரந்தை என்று அழைக்கப்பட்டு வந்தது. சுரந்தை என்பது பிற்காலத்தில் மருவி சுரண்டை என அழைக்கப்படலாயிற்று. 1820 - 1838க்கு

உட்பட்ட காலகட்டத்தில் கிறிஸ்தவ நற்செய்தியை சுரண்டை வட்டாரத்தில் அறிவித்து வந்த ரேனியஸ் தமது மிஷன் குறிப்புகளில் சுரண்டை என்றே இக்கிராமத்தை குறிப்பிடுகிறார்.

சுரர்கள் அருகில் (அண்டையில்) வசித்த ஊர் என்பதால் சுரண்டை என பெயரை பெற்றதாக ஓர் கருத்தும் சொல்லப்படுகிறது.

## சுரண்டை பாளையம்

மதுரை நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்களில் சுரண்டை பாளையமும் ஒன்று. பிற்காலத்தில் இது சுரண்டை ஜமீன் எனப்பட்டது. சுரண்டை ஜமீன் இருந்த இடம் தற்போது கோட்டைத் தெரு என்று அழைக்கப்படுகிறது.

## சுரண்டை ரெவென்யு கிராமங்கள்

அயன் சுரண்டை, ஜமீன் சுரண்டை

## சுரண்டை எல்லைகள்

- சாம்பவர் வடகரைக்கு கிழக்கே
- குருங்காவனத்திற்கு வடக்கே
- குலையனேரிக்கு தெற்கே
- பரன்குன்றாபுரம் வாடியூருக்கு மேற்கே

## சுரண்டை சமூகவியல் ஆய்வு

சுரண்டை நகரில் கீழ்கண்ட சமூகத்தினர் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

நாடார், மறவர், சேனைத்தலைவர், சைவ வேளாளர், சைவ செட்டியார், யோகீஸ்வரர், படையாட்சி, ஆசாரியார், தமிழ் இஸ்லாமியர், ஆதிதிராவிடர், தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர், பிராமணர், மருத்துவர், வண்ணார், பிராமணர் சுரண்டையில் வசித்த அக்கிரகாரம். தற்போது இல்லை மேற்கண்ட சமூகத்தவரில் நாடார்கள் சுரண்டையில் பெரும்பான்மையாக வசிக்கின்றனர்.

மேலச் சுரண்டை மற்றும் கீழச் சுரண்டை நாடார்கள் மத்தியில் தான் முதன் முதலில் கிறிஸ்தவம் பரவியது. அவர்களைத் தொடர்ந்து மேலச் சுரண்டை ஆதிதிராவிடர் பறையர் சமூகத்தில் கிறிஸ்தவம் பரவியது.

## சுரண்டை வட்டாரத்தில் ரேனியஸ் ஐயரவர்களின் மூலம் கிறிஸ்தவம்

1820 முதல் சுரண்டை வட்டாரத்தில் CMS தலைமை மிஷனெரி நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்களால் கிறிஸ்தவ நற்செய்தி சிறப்பாக அறிவிக்கப்பட்டு வந்தது. 02.05.1832 அன்று சுரண்டைக்கு கீழ்ப்புறத்தில் உள்ள பரன்குன்றாபுரத்தில் CMS திருச்சபை உருவானது. அதே ஆண்டு சுரண்டைக்கு கீழ்ப்புறத்தில் உள்ள இலட்சுமிபுரத்திலும் திருச்சபை உருவானது. 1833 இல் CMS சங்க தலைமை மிஷனெரி ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்தி பணியால் கீழச்சுரண்டையிலும், மேலச்சுரண்டையிலும் நாடார் சமூகத்தினர் புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவத்தை ஏற்றதால் இரு இடங்களிலும் தனித்தனியே கிறிஸ்தவ சபைகள் உருவானது. ஆனால் வீரகேரளம்புதூரில் வசித்து வந்த ஊத்துமலை ஜமீன்தார் மற்றும் சுரண்டை ஜமீன்தார் மூலம் மேலச் சுரண்டை மற்றும் கீழச் சுரண்டை கிறிஸ்தவர்களுக்கு கடும் உபத்திரங்கள் கொடுக்கப்பட்டது.

## மேலச் சுரண்டை சபைக்கு ஜமீன்தார் கொடுத்த துன்பம்

மேலச் சுரண்டை ஊர் தலைவர் குமாரவேல் நாடார் கிறிஸ்தவராக மாறியது ஜமீன்தாருக்கு மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியது. ஊர் நாட்டாமை குமாரவேல் நாடாரை அவரது விலா எலும்புகள் ஒடியும் வரை தமது அடியாட்கள் மூலம் அவர அடித்தார். ஜமீன்தார் தாமே வார் கொண்டு மேலச் சுரண்டை நாட்டாண்மை குமாரவேல் நாடாரை தலைகீழாகத் தொங்க விட்டு அடித்தார். வாரினால் அடித்தவாறு வேதம் படிக்க போவாயா? உபதேசியாரிடம் வேதம் படிக்க போக மாட்டேன் என்று சத்தியம் பண்ணுடா என்று கேட்டு கேட்டு அவர் அடிக்க அவர் கொடுத்த அடிகள் மூலம் வலி தாங்காமல் பயத்தினால் திகிலினால் அவர் சொன்னபடியே நாட்டாண்மை சத்தியம் செய்து கொடுத்து விட்டார். அவர் அவ்வாறு சத்தியம் செய்ததை சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருந்த மேலசுரண்டைக் கிறிஸ்தவர்கள் அனைவரும் பயந்து ஓடிப் போனார்கள்.

தமது குடும்பத்தினரின் அழுத்தம் காரணமாக கிறிஸ்தவத்திலிருந்து நாட்டாமை பின் வாங்கினார். அவரது உடல் முழுவதும் காயங்கள் அதன் பின்னர் அவரது காயங்களை ஆற்றுவதற்கான முயற்சிகளை ஜமீன்தார் எடுக்கலானார். நாட்டாண்மை குமாரவேல் நாடாருக்கு கிறிஸ்தவ வேதத்தை விட்டு தான் விலகுவதில் உடன்பாடு இல்லை. ஆனால் அவரது மகள் தன்னுடைய தந்தையை வெளிப்படையாக கிறிஸ்தவத்தை பின்பற்ற விடவில்லை. அவரது மகள் தொடர்ந்து தன்னுடைய தந்தை கிறிஸ்தவத்தில் இருந்தால் ஜமீன்தார் மூலம் மரணத்தை சந்திக்க நேரிடும் தன்னுடைய தம்பிக்கும் பிற்காலத்தில் ஆபத்து வரலாம் என எண்ணி தனது தந்தையார் கிறிஸ்தவத்தைக் கைவிடுவதற்கான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்கலானார்.

நாட்டாமை குடும்பத்தாரின் பின் மாற்றம் சபை மக்களைப் பின்வாங்கச் செய்தது. மேலச் சுரண்டை சபை முற்றிலும் நலிவடைந்தது.

## மேலச் சுரண்டை சபை புதுப்பிக்கப்படுதல்

சுரண்டையை அடுத்துள்ள இரட்டை குளம் என்ற கிராமத்தில் வசித்து வந்தவர் ஆத்திமாடன் என்பவர். இரட்டை குளம் கிராமத்தில் அவருக்கு சில நெருக்கடிகள் ஏற்பட்டதால் அதிலிருந்து விடுபடும்படியாக தமது குடும்பத்தாரோடு கூட மேலச் சுரண்டையில் குடியேறினார். இதுபோன்று பல குடும்பத்தினர்கள் குடும்பம் குடும்பமாக புது குடியேற்றமாக மேலச் சுரண்டையில் குடியேறியதால் பிற்காலத்தில் மேலச் சுரண்டை புதுச் சுரண்டை என அழைக்கப்படலாயிற்று.

இரட்டைக் குளத்திலிருந்து குடும்பமாக மேலச் சுரண்டையில் குடியேறிய ஆத்திமாடன் சுரண்டை மிஷனெரிகளின் நற்செய்தி பணியால் கிறிஸ்தவர் ஆனார். ஆசீர்வாதம் என்ற பெயரில் ஞானஸ்தானம் பெற்றார். புதுப்பிக்கப்பட்ட மேலச் சுரண்டை எனும் புதுச் சுரண்டை சபையின் முதல் கிறிஸ்தவர் என்ற பெருமையை இவர் பெற்றார்.

## பிரச்சனையும் சமய மாற்றமும்

மேலச் சுரண்டை நாடார் உறவின்முறையில் இரு முக்கிய குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு ஊர் கூட்டத்தில் அபராதம் போடப்பட்ட சம்பவம், போடப்பட்ட அபராதத்தை அவர்களிருவரும் ஏற்றுக்கொள்ள மறுத்தது, அபராதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தவர்களுக்கு ஊர் கட்டுப்பாடுகள் விதித்தது என ஓர் பெரும் பிரச்சனை ஏற்பட்டது. இதன் காரணமாக மேலச் சுரண்டையின் இரு முக்கிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பங்களாச் சுரண்டை சென்று மிஷனெரியிடம் தங்களை கிறிஸ்தவத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் இருவரில் ஒருவர் செண்பகராமன் குடும்பம் எனும் ஒரு பெரும் குடும்பத்தைச் சார்ந்த திருமலையாண்டி நாடார், மற்றொருவர் வெற்றிவேல் குடும்பம் எனும் ஒரு பெரும் குடும்பத்தைச் சார்ந்த கிருஷ்ண நாடார் இருவரிடமும் பங்களாச் சுரண்டை மிஷனெரி பேசினார். இருவரும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்வதில் உறுதியாக இருந்தனர். திருமலையாண்டி நாடாருக்கு ஞானப்பிரகாசம் என்ற பெயரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. கிருஷ்ணன் நாடார் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட போதும் அவர் சில காலங்களில் குடும்பமாக பின் வாங்கி விட்டார்.

## சபைக்கு செய்த நன்மைகள்

திருமலையாண்டி நாடார் என்ற ஞானப்பிரகாசம் மேலச் சுரண்டை சபைக்கு தேவாலயம் கட்ட இடம் இல்லாததால் தமது சொந்த இடத்தை தேவாலயம் கட்ட அன்பளிப்பாக கொடுத்தார். அதோடு மட்டுமில்லாமல் மேலச் சுரண்டை என்ற புதுச் சுரண்டை சபைக்கு கல்லறை தோட்டத்திற்காகவும் தனது சொந்த இடத்தை கொடுத்தார். தனது பிள்ளைகளையும் குடும்பத்தார்களையும் மேலச் சுரண்டை என்ற புதுச் சுரண்டைசபையில் சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார் திருச்சபை வளர்ந்தது.

## சிவகாசி கலவரத்திற்கு பின்னர் மேலச்சுரண்டை சபை

1899 இல் நடைபெற்ற சிவகாசி கலவரத்திற்கு பின்னர் சிவகாசியில் இருந்து நாடார்கள் வெளியேறி மேலச் சுரண்டையில் குடியேறினர். அவர்களில் பெரும்பான்மையோர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதன் மூலமாக மேலச் சுரண்டை சபை எனும் புதுச் சுரண்டை சபை மேன்மேலும் வளர்ச்சி பெற்றது.

சமய மாற்றத்திற்கான காரணங்கள்

1. மேலச் சுரண்டை எனும் புதுச்சுரண்டை சிவகுருநாதபுரத்தில் சிவகாசி கலவரம் காரணமாக 1899 க்குப் பின்னர் குடியேறியிருந்த சிவகாசி நாடார்களுக்கும் சுரண்டை சிவகுருநாதபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட நாடார்களுக்கும் இடையே குடியேறிய இருபது ஆண்டுகளுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. (தொடக்கத்தில் சிவகாசியில் இருந்து சுரண்டையில் குடியேறிய போது இவர்கள் இந்துக்களாகவே இருந்தார்கள். இவர்கள் சுரண்டை சிவகுருநாதபுரத்தில் குடியேறிய காலகட்டத்தில் சுரண்டை சிவகுருநாதபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட நாடார்கள் தங்குவதற்கு நிலங்கள் வீடுகள் கொடுத்து இணக்கமாகவே இருந்தனர். அங்குள்ள உறவின் முறையில் இணைந்து செயல்பட்டார்கள் இவர்கள் குடியேறிய இருபது ஆண்டுகளுக்குள் இவர்களுக்கும் பூர்வீகமாக சுரண்டை சிவகுருநாதபுரத்தில் வசித்து வந்த நாடார்களுக்கும் இடையே கீழ்க்கண்ட காரணங்களால் கருத்து வேறுபாடுகள் ஏற்படத் தொடங்கியது.

- சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் தங்களுக்குள் மட்டுமே திருமண உறவை வைத்துக் கொண்டனர். மேலசுரண்டை எனும் புது சுரண்டையைப் பூர்வீகமாகக் கொண்ட நாடார்களுக்குள் திருமண உறவு கொள்வதை முற்றிலும் தவிர்த்து வந்தனர்.
- தங்களுக்குள் சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் பொதுமகமை எனும் தனி உறவின் முறை அமைப்பை ஏற்படுத்தினர்.
- சுரண்டை அழகு பார்வதி அம்மன் கோவிலை நிறுவுவதில் சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் சுரண்டை ஜமீன்தாரோடு இணைந்து முக்கிய பங்காற்றி செயல்பட்டனர். அந்தக் கோவிலில் நடைபெறும் பத்து நாள் திருவிழாவில் சுரண்டையில் வசித்த ஒவ்வொரு சமூகத்தவருக்கும் ஒவ்வொரு நாள் தனி மண்டகப்படி கொடுக்கப்பட்டது. ஆனால் சுரண்டையில் பெரும்பான்மையாக வசித்த நாடார் சமூகத்தவருக்கு தனி மண்டகப்படி கொடுக்கப்படவில்லை. சுரண்டை வாழ் சிவகாசி நாடார்களில் முக்கிய குடும்பமான ஆண்டு கொண்டான் குடும்பத்தாருக்கு நாடார் மண்டகப்படி எனப் பெயர் கொடுக்காமல் 'அம்மன் கொண்டாடி மண்டகப்படி' என தனி மண்டகப்படி கொடுக்கப்பட்டது.
- சுரண்டை அழகு பார்வதி அம்மன் கோயில் இருக்கும் இடத்தில் காளியம்மன் கோயிலை முதலாவதாக சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் தனியே தங்களுக்கு அமைத்தனர். சுரண்டை சிவகுருநாதபுரத்தின் தென்பகுதியில் பிள்ளையார் கோவிலை தங்களுக்கென

தனியே நிறுவினர் அந்த கோயில் ஆண்டு கொண்டான் பிள்ளையார் கோயில் என்று அழைக்கப்பட்டது. மேற்கண்ட காரணங்களால் இரு தரப்பாருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் முற்றியது.

2. சுரண்டையில் வசித்து வந்த இவர்களுடைய உறவினர்களில் அநேகர் சிவகாசியில் கிறிஸ்தவ மிஷனெரிகளின் நற்செய்தி பணியால் கிறிஸ்தவத்தை ஏற்றிருந்தனர். அவர்களுக்குள் இரகசிய கிறிஸ்தவர்கள் பலர் இருந்தனர்.

3. சிவகாசியில் இருந்து போதகர்கள் தலைமையில் குழுவாக இவர்கள் மத்தியில் நற்செய்திப் பணி செய்வதற்காக மேலச் சுரண்டைக்கு வந்து செல்வது வழக்கமாக இருந்தது.

4. சிவகாசி கலவரத்தை சிறப்பான முறையில் அடக்கி ஆயுதப்படை போலீஸ் பிரிவை சிவகாசிக்குள் கொண்டு வந்து நிறுத்தி பாதுகாப்பு வழங்கிய ஆங்கிலேய அரசு மீது சிவகாசி வாழ் நாடார்கள் மற்றும் சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் நல்லெண்ணம் கொண்டிருந்தனர். ஆதலால் ஆங்கிலேய கிறிஸ்தவ போதகர்களின் நற்செய்திக்கு செவி சாய்த்தனர்.

5. பட்டணத்து ஐயா, பட்டணத்து அம்மா என்று அழைக்கப்பட்ட திரு. ஜான் சாமுவேல் தலைமை ஆசிரியர் மற்றும் அவரது மனைவி கிரேஸ் சாமுவேல் ஆகியோர் மேலச் சுரண்டை எனும் புது சுரண்டையில் 1910 க்கும் 1916 க்கும் உட்பட்ட காலகட்டத்தில் செய்த நற்செய்தி பணி, பங்களா சுரண்டை CMS நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக சுரண்டை வட்டாரத்திற்கு செய்த கல்வி பணி சுரண்டையில் அநேக குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள காரணமாக அமைந்தது

6. சுரண்டைக்கு வந்து நற்செய்தி அறிவித்த போதகர்கள் மற்றும் நற்செய்திப் பணியாளர்கள் தங்களது இறுதிக்காலம் வரை சுரண்டையில் தங்கள் மூலம் நற்செய்தியை ஏற்றவர்களோடு கடிதத் தொடர்பு கொண்டு பின் தொடர் பணியையும் சிறப்பாக செய்து வந்தனர். சிவகாசியில் குருவானவராக பணி செய்த கனம். துரைச்சாமி ஐயரவர்கள் சுரண்டை மக்களின் இரட்சிப்புக்காக அடிக்கடி சுரண்டைக்கு வந்து நற்செய்தி அறிவித்ததோடு தமது இறுதி காலம் வரை பாடுபட்டார் புதிதாக இரட்சிக்கப்பட்ட குடும்பத்தாரிடம் தமது மரணம் வரை கடிதம் தொடர்பும் கொண்டிருந்தார்.

7. கால்சட்டை தாத்தா என அன்புடன் அழைக்கப்பட்ட திரு. சுவிசேஷமுத்து Tr உபதேசியார் சுரண்டை மற்றும் சுற்றுக் கிராமங்களில் செய்த நற்செய்திப் பணி.

மேற்கண்டவையால் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட சுரண்டை வாழ் சிவகாசி நாடார்கள் குழுவாக பங்களாச் சுரண்டை குருவானவரை நேரில் சென்று தங்களை சபையில் சேர்த்துக் கொள்ளும்படி வேண்டினர். அவரும் அவர்களனைவரையும் சபையில் சேர்த்துக் கொண்டார். அந்த காலத்தில் சுரண்டை சிவகுருநாதபுரம் இந்து நாடார் உறவின்முறை ஊர் கூட்டத்தில் ஒரு ரூபாய் அபராதம் போட்டது தொடர்பான பிரச்சனை எழும்பியது. 1925, 1926 ஆண்டுகளில் ஏற்பட்ட இந்த இரு காரியங்களால் மேலச் சுரண்டை சபை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

## புதுச் சுரண்டை– முதல் தேவாலய பிரதிஷ்டை

மேலச் சுரண்டையில் தேவாலயம் கட்டப்படுவதற்கு திருமலையாண்டி நாடார் என்ற ஞானபிரகாசத்தால் கொடுக்கப்பட்ட இடம் செண்பகம் கால்வாய் அதை ஒட்டி செல்லும் சாம்பவர வடகரை நெடுஞ்சாலை இரண்டிற்கும் தென்மேல்புறத்தில் அமைந்திருந்தது. புதிய இடத்தில் தேவாலயம் மற்றும் பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டவுடன் அந்த இடம் புதுச் சுரண்டை என அழைக்கப்பட்டதாக ஒரு கருத்து சபை வரலாற்றில் சொல்லப்படுகிறது. சுரண்டையின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட தலைமையாசிரியர் ஜான் சாமுவேல் - கிரேஸ் அம்மாள் வாழ்க்கை வரலாற்று நூலில் மேலச் சுரண்டையை ஒட்டி அதன் தென் மேல் பகுதியில் ஏராளமான புது குடியிருப்பு மனைகள் வீடுகள் உருவானதால் அப்பகுதி புதுச் சுரண்டை என அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. புதுச் சுரண்டை தேவாலயம் கிறிஸ்து ஆலயம் என்ற பெயரில் 10. 12. 1926 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## சபையில் ஏற்பட்டுள்ள வேகமான வளர்ச்சி

கடந்த 50 ஆண்டுகளாக மேலச் சுரண்டை எனும் புதுசுரண்டை கிறிஸ்தவம் வேகமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. சுரண்டை தாய்மார்கள் வீடு வீடாக சென்று குடும்பங்களை சந்தித்து குடும்ப காரியங்களுக்காக பாரத்தோடு ஜெபித்து செயல்பட்டதன் காரணமாக கடந்த 50 ஆண்டுகளாக ஏராளமான குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றுள்ளனர்.

## ஞாயிறு பள்ளி மற்றும் VBS மூலம் ஏற்பட்ட மாற்றம்

புதுச் சுரண்டையில் உள்ள தேவாலயம் மூலம் நடைபெறுகிற ஞாயிறு பள்ளி மற்றும் விடுமுறை வேதாகம பள்ளி எனும் VBS காரணமாக சிறு பிள்ளைகள் இரட்சிப்பின் அனுபவத்திற்குள் வந்தனர். அந்த சிறுபிள்ளைகள் மூலமாக அவர்களது பெற்றோரும் கிறிஸ்தவத்தை ஏற்றுள்ளனர். சிறுவர் ஊழியத்தின் மூலமாக சுரண்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆலடிப்பட்டி கிராமத்தில் திருச்சபை உருவாகியுள்ளது.

## வாலிப ஆண்கள் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி

1980 களில் புது சுரண்டையைச் சார்ந்த வாலிப ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் மாபெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. அதன் மூலமாக அநேக குடும்பத்தினர் கிறிஸ்தவத்தை ஏற்றுள்ளனர்.

## தாய்மார்களின் சீரிய நற்செய்திப் பணியால் ஏற்பட்ட வளர்ச்சி

1950 க்குப் பின் புதுச் சுரண்டை மற்றும் கீழசுரண்டையில் கிறிஸ்தவம் வேகமான வளர்ச்சியைப் பெற ஜெமிமா அழகுசுந்தரம் அம்மாள், கமலம் வைத்தியலிங்கம் அம்மாள், மனோன்மணி சின்னமணி அம்மாள், ஜெயின் அம்மாள் என்ற கெத்சி பால் நடராஜன் அம்மாள் ஆகிய தாய்மார்கள் தலைமையிலான சுரண்டை தாய்மார்களின் நற்செய்திப் பணி காரணமாக இருந்தது. இவர்கள் தலைமையிலான தாய்மார் சங்கம் மூலம் சனிக்கிழமை தோறும் இரவு 7:30 மணி முதல் 9 மணி வரை நடைபெற்ற தாய்மார் ஐக்கிய சங்க கூட்டமும், ஞாயிறுதோறும் மாலை ஐந்து முதல் ஆறு மணி வரை தாய்மார்கள் வீடு சந்திப்பு மற்றும் ஜெபக்கூட்டம் திங்கள் தோறும் இரவு 8 மணி முதல் 9 மணி வரை குடும்பப் பிரச்சினைகளுக்காக தாய்மார்கள் செய்த சிறப்பு ஜெபம், செவ்வாய் தோறும் எழுத வாசிக்கத் தெரியாத பெண்களுக்கு எழுதவாசிக்க கற்றுக் கொடுத்து வேதாகமத்தை பரிசாகக் கொடுக்க செய்த தாய்மார் சங்க ஊழியம், திருமண வீடுகளில் திருமணத்திற்கு முந்தின நாள் மணமகன், மணமகளை வாழ்த்துகிற தாய்மார் ஐக்கியத்தின் ஊழியம் வெள்ளிதோறும் இரவு 8 முதல் 9 மணி வரை வியாதியஸ்தர்களுக்காக, குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்காக செய்யப்பட்ட சிறப்பு ஜெபம், ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 3 மணி முதல் 5 மணி வரை இரண்டிரண்டு பெண்களாக 11 கிராமங்களுக்கு சென்று ஞாயிறு பள்ளி நடத்தி வந்த காரியம், ஞாயிறு தோறும் மருத்துவமனைக்கு சென்று ஜெபித்து வந்த காரியம் ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் காலங்களில் ஏழை எளியவர்களுக்கு தாய்மார் சங்கம் மூலம் கொடுக்கப்பட்ட புத்தாடை நிகழ்ச்சிகள் வெள்ளிக்கிழமை இரவு 7 மணி முதல் 10 மணி வரை நடைபெற்ற தாய்மார்கள் உபவாச ஜெபம் ஆகியவை சுரண்டையில் கிறிஸ்தவம் வேகமாக வளர காரணமாக இருந்தது.

## ஊழியர்கள் எழுப்புதல்

சுரண்டையில் இருந்து ஏராளமான வாலிப ஆண்கள், பெண்கள் மிஷனெரிகளாக இந்தியா முழுவதிலும் சிறப்பாக ஊழியம் செய்து வருகின்றனர். அதோடு மட்டுமல்லாமல் வாலிபர் மத்தியில் சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்கிற ஊழிய இயக்கங்களில் ஊழியர்களாக சிறப்பாக ஊழியம் செய்து வருகிறார்கள்.

## புதுச் சுரண்டை சபை வளர்ச்சி

19. 12. 1976 இல் சேகர குருவானவர் கனம். நெஸ்றர் பிலிப் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம் சா. தானியேல் ஆபிரகாம் அவர்கள் தலைமையில் புதுச் சுரண்டை தேவாலய பொன்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அதை நினைவு கூறும் வண்ணம் எழுத்துக் கல் தேவாலயம் முன்பு வைக்கப்பட்டது.

## தேவாலய விரிவாக்கம்

1926 இல் கட்டப்பட்ட தேவாலயம் சபையார் அமர்ந்து ஆராதிப்பதற்கு போதுமான அளவு இல்லாததால் 1990 இல் பெரிய அளவில் தேவாலயத்தை விரிவாக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றன. விரிவாக்கப்பணியுடன் கோபுரம் கட்டுமான பணியும் நடைபெற்றது. விரிவாக்கம் செய்யப்பட்ட தேவாலயமும் கோபுரமும் 25. 03. 1990 இல் சேகர குருவானவர் கனம். வெல்கம் அற்புதராஜ் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகா கனம். ஜேசன் S தர்மராஜ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## தேவாலய பவளவிழா

23. 12. 2001 அன்று புதுச் சுரண்டை கிறிஸ்து தேவாலய பவளவிழா (75 வது ஆண்டு) சபை ஊழியர் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள், சேகர குருவானவர் கனம். எட்வின் ஜெபராஜ் ஐயரவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம் ஜெயபால் டேவிட் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

## கோபுரம் மற்றும் ஆல்டர் பிரதிஷ்டை

புதுச் சுரண்டை சபை புதுப்பிக்கப்பட்ட தேவாலய கோபுரம் மற்றும் ஆல்டர் பிரதிஷ்டை 12. 04. 2015 அன்று சபை ஊழியர்கள் திரு. மோகன், திரு. சுகுமார் சேகர தலைவர் கனம். ஜெபராஜ் ஞானசுவாமி ஐயரவர்கள் தலைமையில் நெல்லை பேராயர் மகாகனம். J. J. கிறிஸ்துதாஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கை அடிப்படையில் சுரண்டை சபைகளின் வளர்ச்சி நிலை

1956-1957 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி புதுச்சுரண்டையில் 339 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 154 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

1962-1963 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி புதுச்சுரண்டையில் 419 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 192 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

1970-1971 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி புதுச்சுரண்டையில் 591 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 295 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

1997-1998 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி புதுச்சுரண்டையில் 1015 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 826

பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

2002-2003 திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி புதுச்சுரண்டையில் 1056 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர் 810 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

புதுச்சுரண்டையில் இருந்து பிரிந்த ஆலடிப்பட்டி திருச்சபையில் 230 ஞானஸ்நானம் பெற்றவர்கள் இருந்தனர். 107 பரி. நற்கருணைக்காரர்கள் இருந்தனர்.

## சுரண்டையில் கத்தோலிக்க கிறிஸ்தவம்

சுரண்டையில் 19 ஆம் நூற்றாண்டிலேயே சிறிய அளவில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இருந்துள்ளனர். கத்தோலிக்க சபை இருந்துள்ளது. சுரண்டை தெற்கூர் எனப்படும் வரகுணராமபுரத்தின் தொடக்கத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. கத்தோலிக்க கிறிஸ்தவ மீனவர்கள் தேவாலயத்தை சுற்றி வசித்து வருகிறார்கள். இவர்கள் மூலமே இங்கு சபை உருவாகியுள்ளது. சேர்ந்தமரம் பங்கின் கீழ் சேர்ந்தமரம் பங்கு தந்தை மேற்பார்வையில் சுரண்டை சபை இருந்து வந்தது. நாளடைவில் சுரண்டை வர்த்தக மையமாக வளர்ந்த போது கத்தோலிக்க கிறிஸ்தவ சபையும் வேகமான வளர்ச்சியைப் பெற்றது. நாடார், வேளாளர் மற்றும் பல சமூகத்தினரும் கத்தோலிக்க சபையில் சேர்ந்தார்கள். வளர்ந்து வந்த சுரண்டையைத் தலைமை இடமாகக் கொண்டு தனி பங்கை உருவாக்க திருநெல்வேலி கத்தோலிக்க திருமண்டலம் முடிவெடுத்தது. அதன்படி 1994 இல் சுரண்டை சபையைத் தலைமை சபையாகவும் வீரகேரளம்புதூர், இராஜகோபாலப்பேரி, அதிசயபுரம், V. K. அண்ணாநகர் ஆகிய சபைகளை கிளை சபைகளாகவும் கொண்டு சேர்ந்தமரம் பங்கில் இருந்து சுரண்டை பங்கு 1994 இல் உருவாக்கப்பட்டது. சுரண்டை பங்கின் கீழ் சுரண்டையில் R. C. நடுநிலைப்பள்ளியும் வீரகேரளம்புதூரில் R. C. தொடக்கப்பள்ளியும் செயல்பட்டு வருகிறது.

## தற்போதைய புதுச் சுரண்டை சபை நிலை

2024 நிலவரப்படி புதுச் சுரண்டை சபையில் 330 குடும்பத்தினர் உள்ளனர். புதுச்சுரண்டை சபையிலிருந்து சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்த ஆலடிப்பட்டி சபைக்கு தேவாலயம் கட்ட புதுச் சுரண்டை சபையைச் சார்ந்த திரு. ஏ. எஸ். ஏ. ஆர். பாலச்சந்திரன் அவர்கள் தமது சொந்த நிலத்தையும் அளித்து தமது சொந்த செலவில் 60 அடி நீளமும் 20 அடி அகலமும் கொண்ட தேவாலயத்தை 1996 இல் கட்டிக் கொடுத்தார்கள். ஆலடிப்பட்டி சபையில் சுமார் நூறு குடும்பத்தினர் வசிக்கின்றனர். புதுச் சுரண்டை சபையிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து புதுச் சுரண்டை சேகரத்துக்குட்பட்ட சபையாக இருந்த காமராஜர் நகர் சுரண்டை சீயோன் தேவாலயம் சபையில் 220 குடும்பத்தினர் உள்ளனர். தற்போது தனி சேகரமாக உள்ளது.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'** (Christian Historical Society) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: Christian Historical Society**
**A/c Number : 1748 020000 4906**
**Bank name : Federal Bank**
**IFSC code: FDRL0001748**



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com




# TE DEUM
## என்ற ஸ்தோத்திரப்பாட்டு

தமிழ்ச் சுவிசேஷ திருச்சபையில் பாடப்படும் எல்லா ஞானப்பாட்டுகளிலும் பூர்வீகமானது "பணிந்து உம்மையே' என்று துவக்கும் பெரிய ஸ்தோத்திரப் பாட்டு. (நம்முடைய சபைகளில் தேவனே உம்மைத் துதிக்கிறோம்: உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம். திருச்சபையின் கீதத்தை ஜெப சிந்தையோடு பாடுவதே.)


மிலான் பட்டணத்துக் கண்காணியாகிய அம்புரோசியு என்ற திருச்சபைப் பிதா இதைப் பாடி 1600 வருஷங்களுக்கு மேலாயிற்று. அதின் லத்தீன் வாசகம் 'கடவுளாகிய உம்மையே" என்று பொருள்படுகிற Te Deum என்னும் வார்த்தைகளோடு துவக்குவதால் இவைகளே அதற்குப் பெயராயின. லுத்தர் சாஸ்திரியார் இப்பாட்டைக் ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்து சுவிசேஷ சபையில் நடைமுறைக்கு கொண்டு வந்ததினால், தமிழ்த் தேவாராதனை மாலையில் லுத்தருடைய பெயர் அதின் கீழ் அச்சிட்டிருக்கிறது.

அம்புரோசியு புறமதஸ்தனாயிருந்தும், மிலான் பட்டணத்தின் தேசாதிபதியாக கிறிஸ்தவ சபைக்கும் மெத்த நன்மை செய்து மெய் விசுவாசியாய் விளங்கினபடியால், அங்குள்ள சபை தனக்குக் கண்காணியாகும்படி அவரை வேண்டிக்கொள்ளவே, அவர் சொற்பக்காலத்துக்குள் ஞானஸ்நானம், குருப்பட்டம், கண்காணி அபிஷேகம் என்பவற்றைப் பெற்று, 374-ம் வருடம் இந்த உத்தரவாதமுள்ள தெய்வ ஊழியத்தைச் செய்ய ஒப்புக்கொண்டார். அவரது சிறந்த வரம் அவர் செய்த பிரசங்கங்களினாலும் அவர் பின் வைத்த வேத சாஸ்திர புஸ்தகங்களினாலும் வெளியானதுமன்றி, அவர் அக்காலத்துத் திருச்சபையில் வழங்கின பாடலையும் சங்கீத சாஸ்திரத்தையும் விருத்தியாக்கினதினாலும் இனிது விளங்கும்.

அவர் பாடின மேற்கூறிய ஸ்தோத்திரப் பாட்டின் முதல் பகுதியில் திரியேகக் கடவுளுக்கும், அடுத்த இரண்டு பகுதிகளில் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், கடைசிப் பகுதியில் மறுபடியும் திரியேகருக்கும் துதி கூறப்படுகிறது.

ஜெர்மானியர், பிரான்சு, வட இத்தாலியா போன்ற தேசங்களுக்கு இராஜாவாக இருந்த பெரிய கார்லு (Charlemagne) இராஜா கி.பி. 800-ம் வருஷம் கர்த்தர் பிறந்த பண்டிகையன்று ரோமாபுரியிலுள்ள பேதுரு கோவிலின் பெரிய பீடத்திற்கு முன் வந்து பாப்புவின் கையினால் பழைய மேற்கு ரோம இராச்சியத்தின் கிரீடத்தைப் பெற்றபோது, இப்பாட்டே பாடப்பட்டது. பிறகு 1492-ம் அக்டோபர் மாதம் 12 நாள் கொலம்பஸும் அவரது தோழரும் அமெரிக்காக் கண்டத்தைச் சேர்ந்த முதல் தீவைத் தூரத்தில் பார்த்தபோது அவர்கள் மனமகிழ்ச்சியால் நிறைந்து ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு இந்தப் பாட்டைப் பாடி தெய்வ நாமத்தைத் துதித்தார்கள். அப்போது இப்பாட்டுக்கு வயது ஆயிரமென்பதை யோசிக்கும்போது ஆச்சரியப்படாதிருக்க முடியாது.

இப்பாட்டைப்போல் பூர்வீகமான மொழிகள், கட்டடங்கள், ஆயுதங்கள், வஸ்திரங்கள் முதலிவை எல்லாம் பழையவைகளாயினும், இப்பாட்டு எப்போதும் புதிதாகவேயிருக்கிறது. பூர்வீகமான அநேக விஷயங்களும் மனிதரின் அனுஷ்டானத்தை விட்டு ஒழிந்தபோதிலும், இப்பாட்டு மாத்திரம் ஒழியாமைக்குக் காரணம் அதிலடங்கிய வேத உபதேச சத்தியமே. வானமும் பூமியும் ஒழிந்துபோம். என் வார்த்தையோ ஒழிந்துபோகாது என்று 'இயேசு கிறிஸ்து திருவாய்மலர்ந்தருளின திருமொழி அவரது வசனத்திலிருந்து எடுபட்ட செய்யுளுக்கும் செல்லும். நம்முடைய நினைவுகளும் பேச்சுகளும் தெய்வ வார்த்தைக்கு எவ்வளவாக ஒத்திருக்குமோ அவ்வளவாக அவைகளும் அவ்வார்த்தை போல் நீடித்திருக்கும்.




***ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்.***

உபாகமம் 32; 7ல் 'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்' என்ற வார்த்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு சொல்லப்பட்டது.

அன்று பூர்வநாட்களை அறிந்து அதனை தங்கள் பிள்ளைகளுக்கு கற்று கொடுப்பது ஒவ்வொரு தகப்பனின் கடமையாக இருந்தது. ஆனால் இன்று அவசர உலகத்தில் பலர் இந்த கட்டளையை மறந்துப் போனவர்களாக இருக்கின்றோம். இன்றைக்கு இந்த உன்னதமான பணியினை, கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நிறைவேற்றி வருகின்றது.

உறுப்பினர்கள், வாசகர்கள் அனைவருக்கும் இனிய வாழ்த்துக்களை கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கின்றோம்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், பல இளைஞர்கள் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் நமது இலக்குகளை முடிக்க துரிதமாக செயல்பட்டு கொண்டு இருக்கின்றோம். அதன் படி தென்காசி மாவட்டம் சுரண்டையில் உள்ள கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க இடத்தில் நடைபெறும் கிறிஸ்தவ நூலகம், அருங்காட்சியகம் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் அமைக்க வேலைகள் மிகசிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்த வரலாற்றுச் முக்கியத்துவம் வாய்ந்த நூலகப் கட்டிடப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து தங்களால் முடிந்த நன்கொடையாகவோ அல்லது கட்டிட பொருட்களாகவோ கொடுக்கவும், இணைந்து செயல்படவும் ஜெபிக்கவும் பங்கு பெறவும் உங்களை அழைக்கின்றோம்.

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.**

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in




Yearly Subscription

600

christianhistoricalsociety.in

Apply Now

Monthly Magazine for church history

Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401